விலை சதம் 60

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

பக்கங்கள் 10

மலர் [illegible] வைகாசி 5 ஞாயிற்றுக்கிழமை (18—5—80) இதழ் 98

RECEIVED 1980-5-18 PERIODICALS DIVISION UNIVERSITY LIBRARY CAMPUS

பளிச்சிடும் வெண்மைக்கு
'அண்ணா நீலம்'
1 அவு., 1/4 ரு, 1/2 ரு, 1 ரு. பைக்கட்டுகளில் விற்பனையாகிறது, வசதிக்கேற்ற பைக்கட்டுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா தொழிலகம்
இணுவில்.
தொலைபேசி: 7412

சகாய விற்பனையும், அன்பளிப்பும்
23-5-80
வன்னிவிளாங்குளம் முத்துமாரியம்மன் பொங்கல் திருவிழாவில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாயவிற்பனையுடன் அன்பளிப்புகளும், மேலுறைகளுக்கான சிறந்த பரிசுகளும் வழங்கப்படும்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சீனி ரூ. 6 ரூபா; பங்கீடு இல்லை

## சகல கடைகளிலும் கிடைக்கும்

(கொழும்பு)

சீனியின் விலை இறுத்தல் 4 ரூபா 50 சதத்திலிருந்து 6 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனியின் விலையை நாளை திங்கட்கிழமை முதல் அமுல் செய்வதென்று அரசு தீர்மானித்துள்ளது.

உலக சந்தையில் சீனியின் விலை அதிகரித்ததை அடுத்து பங்கீட்டு அடிப்படையில் சீனியைப் பொதுமக்களுக்கு வழங்குவதென்று கடந்த வியாழனன்று அரசு எடுத்த தீர்மானம் இப்போது கைவிடப்பட்டுள்ளது.

சீனியின் விலை அதிகரிக்கலாம் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்ததைபடுத்து கொள்ளை லாபம் அடிக்கும் நோக்குடன் அநேக வர்த்தகர்கள் பெருந்தொகையான சீனியைப் பதுக்கிவைத்திருந்ததன் காரணமாக தனியார் துறைக்குத் தொடர்ந்து சீனி வழங்குதில்லை என்றும் கூட்டுறவுக்கடைகள் மூலம் பொதுக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் மட்டுமே வழங்குவதென்றும் அரசு வியாழன்று தீர்மானித்திருந்தது.

இத்தீர்மானம் அமுல் செய்வதினால் பொது மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுமென ஜனா

(9-ம் பக்கம் பார்க்க)

## யாழ். லக்சலா மீண்டும் தொண்டமான் திறப்பார்

(யாழ்ப்பாணம்)

கிராமிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு தொண்டமான் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நான்கு தினங்கள் இங்கு தங்கவுள்ளார்.

அடுத்த மாதம் 12 ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வரும் அமைச்சர் அன்று யாழ் 'லக்சலா' நிறுவனத்தை மீண்டும் ஆரம்பித்து வைப்பார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சருக்கு மாபெரும் வரவேற்பளிப்பதற்கான முயற்சிகளை யாழ். சிறு கைத்தொழில் இலாகா உதவி அத்தியட்சகர் திரு எஸ். விசுவலிங்கம் மேற்கொண்டு வருகிறார். (கொ-இ)

## கட்சி நிதிக்கு அமைச்சர்களின் சம்பளம்

ஸலிஸ்பரி, மே 17

ஸிம்பாப்வே குடியரசின் அமைச்சர்களும் ஆளுங் கட்சி உறுப்பினர்களும் தமது சம்பளத்தில் 320 டாலரை மட்டும் எடுத்துக்கொண்டு மிகுதியை தமது கட்சியின் நிதிக்குக் கொடுப்பதெனத் தீர்மானித்துள்ளனர்.

அமைச்சர்களுக்கு 1000 டாலர்களும் எம். பி. க்களுக்கு 600 டாலர்களும் மற்றும் சில அலவன்சுகளும் வழங்கப்படுகின்றன. (இ)

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டி [illegible] கோவில் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

## தமிழரின் சுயநிர்ணய உரிமை: மத்தியவங்கி ஊழியர் ஆதரவு

(கொழும்பு)

"தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை நியாயமானதே".

இவ்வாறு மத்திய வங்கி ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கை மார்க்சிஸக் கோட்பாடுகளுக்கு அமைவாக உள்ளது என்றும் மேற்படி ஊழியர் சங்கத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தமிழ் ஈழத்தையும் முன்னேற்றலாம்

### வட்டு. 'திரு' நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசியாவிலேயே மிகப் பெரிய மின்தறி நிலையம் ஒன்றை இலங்கைக்கு அமைத்துக் கொடுத்த ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவியுடன் எமது தமிழ் ஈழத்தையும் பொருளாதார ரீதியில் முன்னேற்ற முடியும் என நாம் நம்புகிறோம்.

இலங்கை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச் சங்க யாழ். கிளை நாசிசத்தை எதிர்த்து வெற்றி கண்ட 35 வது ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய இலங்கை - ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச் சங்க யாழ் கிளைத் தலைவரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. தா. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

திரு திருநாவுக்கரசு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. 41, ஆயிரம் சதுர மைல்களைக் கொண்ட ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு அந்த நடைபெற்ற யுத்தங்களால் முற்று முழுதாக அழிந்து ஒழிக்கப்பட்டது அப்படியிருந்தும் அந்நாடு சுதந்திரமடைந்த 35 ஆண்டுகளுக்கிடையில் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்த10

(10-ம் பக்கம் பார்க்க)

பால் உற்பத்தியாளர்களுக்கும்
பால் பாவனையாளர்களுக்கும்
ஓர் வேண்டுகோள்

பால் உற்பத்தியாளர்களே பாவனையாளர்களே மேற்படி எமது சங்கம் அரசாங்க கொள்கைக்கு அமைவாக 1-6-80 முதல் பால் கொள்வனவு விற்பனவுகளை லீற்றர் முறையில் அமுல்படுத்த உள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

1 லீற்றர் பால் (1 3/4 போத்தல்) கொள்வனவு விலை— ரூபா 2-00
1 லீற்றர் பால் (1 3/4 போத்தல்) விற்பனவு விலை— ரூபா 2·40 சதம்.

எனவும் நிர்வாகசபை நிர்ணயித்துள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

தலைவர்
நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்,
பாற்பண்ணைத் திட்டம்,
62, வைமன் வீதி, நல்லூர். 5812

## உயிரைக் காப்பாற்ற இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

மந்திகை அரசினர் வைத்தியசாலை 7 ம் வாட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள அனாதைச் சிறுவன் ஒருவனின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக இரத்தம் தேவை என்றும் இரத்த தானம் செய்ய விரும்புவோர் தம்முடன் உடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் இவ்வாஸ்பத்திரி டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

CANTABIA INSTITUTE
NOV / DEC 1980 Session
ICMA Section A, B & PI
IAA (all parts), IAB (all parts)
CHARTERED (Preliminary)
வகுப்புகள் 7-6-1980 தொடக்கம் ஆரம்பிக்கப்படும்
கொழும்பு OXONIA விரிவுரையாளர்களால் நடாத்தப்படும் வகுப்புகளில் சேர்ந்துகொள்ள உடன் தொடர்புகொள்ளுங்கள்.
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 5776

'இயேசு கிறீஸ்து ஜீவிக்கிறார்'
ஆத்ம சரீர சுகமளிக்கும் அற்புத உயிர் மீட்சிக் கூட்டங்கள்
இடம்: யாழ் திறந்தவெளி அரங்கு மைதானம்
நேரம்: தினமும் மாலை 5-30 மணிக்கு
காலம்: மே 19 முதல் 25 வரை 1980
ஜீவிக்கிற இயேசு கிறீஸ்துவின் வல்லமையை வந்து பாருங்கள்.
* குருடர் காண்கிறார்கள்
* செவிடர் கேட்கிறார்கள்
* சப்பாணிகள் நடக்கிறார்கள்
நற்செய்தி அளிப்பவர்:
சங். M. பெர்ணாண்டோ
யாவும் இலவசம்! யாவரும் வருக! 5664

HONDA
பல நிறங்களில் - பல ரகங்களில் புதிய ஹொண்டா மோட்டார் சைக்கிள்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.
இன்றே விஜயம் செய்யுங்கள்
சன்வா எலெக்ரோனிக்ஸ்
272, கே. கே. எஸ். வீதி -- யாழ்ப்பாணம். (5815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

கட்டுடை, தம்பிராயில் 20 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு திருமதி செல்வத்துரை கட்டுடை, மானிப்பாய். 5766

இறைச்சிக்கேற்ற சேவற் கோழிகளும் சூப்புக்கான கோழிக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு பரா கோழிப் பண்ணை, இணுவில் வீதி, மானிப்பாய். 5785

அல்சேசன் நாய்க்குட்டி ஒன்று (1½ மாதம்) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு த ரகுராஜ் "புவனகிரி", சாப்பிரன் ஒழுங்கை, கொக்குவில் 5794

யாழ் கண்டிக்குளி சுவாட்டின் ஒழுங்கையில் உள்ள இரண்டு பரப்புக் காணியும் இரண்டு வீடுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டியவர்: S. P. ஞானப்பிரகாசம், தெல்லிப்பழை. 5604

கனகராயன் குளம் பெரிய நீர்ப்பாசனக் குளத்தின் கீழ், கண்டி வீதியில் இருந்து சில யார் தூரத்தில் 19 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு கடித மூலம் தொடர்பு! விளம்பர இல: 5808 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 5808

உடுவில், மானிப்பாய் ரோட்டில் மகளிர் கல்லூரியிலிருந்து ¼ மைல் தூரத்தில் ரோட்டுக்கு அருகாமையில் வீடு கட்டக் கூடிய காணி இணைந்து டன் விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்ளவும்: அப்பாக்குட்டி செல்வரத்தினம் மல்வம் ரோட், உடுவில் 5810

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் மிக நல்ல குடிதண்ணீர்க் கிணறுடன் 4 அறை கொண்ட மின்சார வசதியுடன் கூடிய வீடும் 1 1/4 பரப்புடைய காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்: 24, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 5811

புதிய மொடல் "நாஷனல் பனசோனிக்" ஸ்ரீரியோ றேடியோ - டேப்றெகோடர் (RX 5120) விற்பனைக்குண்டு இ கந்தசாமி 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 5816

## வாடகைக்கு

நாவலர் வீதி கஸ்தூரி வீதி சந்தியில் (அப்பையா கடைச் சந்தி) இரண்டு கடைகள் உண்டு விபரங்கட்கு 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5799

## தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது அதன் சுற்று புறத்தில் ஒரு சிறிய முஸ்லீம் குடும்பம் தங்குவதற்கு வீடு வாடகைக்குத் தேவை K. டீன், ரும்சன்ஸ், 19 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5800

சிறுவர் கல்வி நிலையங்களில் ஆசிரியையாக பணிபுரிவதற்கு G. C. E சித்தியடைந்த பெண்கள் தேவை 25-5-80 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும் சிறீவாணி - C/O S காசிநாதன் இல: 230/11 கே கே எஸ். வீதி, யாழ்ப்பாணம் 5762

யாழ்ப்பாணம், ரேயல் டின் பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண்உதவியாளர் உடன் தேவை தராதரம் மற்றும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில்வரவும். 5777

யாழ். நகரிலுள்ள பிரபல தனியார் கல்வி நிறுவன மொன்றுக்கு காசாளர் / லிகிதர் தேவை. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 20-5-80 க்கு முன்பாக அனுப்பப்பட வேண்டும். விளம்பர இல ;5787 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 5787

## கல்வி

English Tution ஆங்கில போதனை G C E சம்பாசனை, பொது அறிவு, எழுதவும் - 76 ஆஸ்பத்திரி வீதி, அல்லது 81 மணிக்கூட்டு வீதி. 5759

### பழுதடைந்த வெற்றுபரல் விற்பதற்கான கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தில் பழுதடைந்த வெற்றுப் பரல்கள் விற்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பிக்க விரும்புவோர் 28-5-80-க்கு முன் 'பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி' என்னும் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும், கடித உறையின் இடது மூலையில் "பழுதடைந்த வெற்று பரல் விற்பதற்கான கேள்விவிண்ணப்பம்' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்

குறிப்பு:
பரல்களை சங்க வேலைநாட்களில் வந்து பார்வையிடலாம்

பொதுமுகாமையாளர்
கரைச்சி தெற்கு ப நோ. கூ. ச கிளிநொச்சி
5803

## தேவை

ஆங்கில அறிவுடைய சிட்டை எழுதுவினைஞர் (Bill Clerks) நேரில் தொடர்பு கொள்க:

6, இரண்டாவது ஒழுங்கை,
பிறவுண் ரோட்,
யாழ்ப்பாணம்.
5813

### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் கேள்வி விளம்பரம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 6,232 வெற்றுச் சாக்குகள் கேள்வி் த்தி மூலம் விற்பனைக்குண்டு வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

விண்ணப்பப் படிவங்களை பதிவுத்தபால் மூலம் இடது பக்க மூலையில் "வெற்றுச்சாக்குகள் கேள்வி" என்று எழுதப்பட்டு பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம். சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்

விண்ணப்ப முடிவுத் திகதி 27-5-80.

பொதுமுகாமையாளர்,
சங்கானை
ப. நோ. கூ. சங்கம்.
சங்கானை,
16-5-80. 5502

# ஜே. ஆர். அரசுக்கு இன, மத பேதம் எதுவும் கிடையாது

## கரணவாயில் மாவட்ட அமைச்சர்

(நெல்லியடி)

இன, மத, மொழி வேறுபாடின்றி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கம நாடு முழுவதற்கும் சேவை செய்து வருகின்றது, எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற வேறுபாடின்றி சகல தொகுதிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து, அபிவிருத்தி செய்து வருகின்றது தொகுதிகள் ஒவ்வொன்றையும் அபிவிருத்தி செய்வதற்கென தலா 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு உப தபால் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய போது யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு பி, விஜயக்கோன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

இப்பிரதேசத்தில் அரசாங்கத்துக்கு மாறான தப்பபிப்பிராயக் கருத்துக்களைச் சிலர் கூறலாம். ஆனால் அவற்றை மக்கள் நம்பக்கூடாது நாட்டின் அபிவிருத்திக்கு மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். தொகுதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை உரியமுறையில் செலவழிக்க கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முன்வர வேண்டும் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனா தார்மீக வழியில் ஒத்துழைக்கக் கோரி, நாட்டில் பொருளாதார சுபிட்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றார்.

கடந்த அரசாங்கத்தின் ஏழு வருட ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் சரியான முறையில் அமுல்ப் படுத்தப்படவில்லை இந்த உபதபால் நிலையம் உடுப்பிட்டி எம் பி திரு. இராசலிங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே, அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டுள்ளது.

(9ம் பக்கம் பார்க்க)


## மணமகள் தேவை

இந்து வேளாளர் இனத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வேலை செய்யும் 30 வயதுடைய மணமகன் அதே இனத்தைச் சேர்ந்த அழகும், அறிவும் நிறைந்த மணமகளைத் தேடுகின்றார். வெளிநாட்டில் வேலைசெய்ய விருப்பம் உள்ளவராயிருத்தல் வேண்டும் சீதனம் விரும்பத்தக்கது. சாதகம், புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்
விளம்பரதாரர், த பெ. இல: 26048, பத்தரம், இராக 5714


ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்த தண்ணீர் பம்புகள் விற்பனைக்குண்டு

ORIENTAL KOSHIN

HOMEMATE FX-2500N



ஹோம்மேற் பம்

ஏகவிநியோகஸ்த்தர்

எஸ். சற்குணராசா அன் கோ
S. Satkunarajah & Co
72, ஸ்ரான்லி றேட்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1450 - மட்டுமே 5782


## முக்கிய அறிவித்தல்

எமதுஸ்தாபனத்தில் கடமைபுரியும் எவரிடமும் எமது நிறுவனத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள ரசீதுகள் இன்றியும், கடிதங்கள் இன்றியும் பணம் வழங்கப்பட்டால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை இத்தால் பகிரங்கமாக அறிவித்துக்கொள்கிறோம்.

த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
42-44, பெரியகடை - யாழ்ப்பாணம்
போன்: 7034 (5809)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் துயில் கொள்கிருள்!

காலைப் பொழுதின் விடிப்பு கங்குல் திரையை அகற்றி கதிரவன் தன் பொற்கிரணங்களை உலகெங்கும் பரப்பிக் கொண்டிருந்தான். புள்ளினங்களின் சலசலப்பு. பக்கத்து முருகன் ஆலயத்தில் இருந்து 'ஓம்...ஓம்' என்றொலிக்கும் ஓங்கார மணி ஓசை செவிகளை நிறைக்கிறது.

கனகம் நெருப்பில் வேகாத குறையாய் இருந்து கடைக்கு கொடுப்பதற்காய் பலகாரம் செய்துகொண்டிருந்தாள். அவள் மூத்த மகள் சாந்தி தாய்க்கு உதவியாய் நின்றுகொண்டிருந்தாள். சுதனும், கவிதாவும், ரவிதாவும் இன்னும் நித்திரையால் எழும்பவில்லை. சாந்தி எழுந்து சுட்ட தோசைகளை அழகாய் ஒரு பெட்டியில் அடுக்கிவிட்டு சுதனையும், கவிதாவையும் எழுப்பி கால்முகம் கழுவிவிட்டு ஆளுக்கு இரண்டு தோசைகள் கொடுத்துவிட்டு கடைக்கு அனுப்பிவைத்தாள். நேற்று நடந்த சம்பவம் மனதை உலுக்கினாலும் அவள் கடமையை மறக்கவில்லை.

கனகம் களைப்போடு எழுந்து வந்து 'அந்த சின்னஞ்சிறு செல்லாம் எழும்பிற்றுதுகள். உவள் உமா இன்னும் எழும்பவில்லை. அவளை எழுப்பிவிடு சாந்தி' என்றபடியே புல் அறுப்பதற்காய் வயலுக்குப் புறப்பட்டாள் கனகம். 'உமா உமா' என்று நின்ற இடத்தில் நின்றே குரல்கொடுத்தாள். சாந்தி வேதனைப்பட நெஞ்சை அழுத்தினாலும், எழும்பவே மனம் இன்றி பொய் உறக்கத்தில் கிடந்த உமாவுக்கு நன்ருய் கேட்டது. நேற்று நடந்த அந்தச் சம்பவம் அவளைத்தான் இன்னும் பாதித்திருக்கிறது என்பது யாருக்குத் தெரியும். உமாவின் மனதில் ஒரு தெளிவு. இரவெல்லாம் யோசித்து அவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள் உற்சாகமாய் எழுந்து சென்று முகம் கழுவிவிட்டு வந்து செத்தையில் செருகியிருந்த அந்த ஓட்டைக் கண்ணாடித் துண்டில் முகத்தை ஒருமுறை பார்த்துக்கொண்டாள் அவள் மனக் கண்ணாடி பிம்பத்தில் மோகனின் அன்பு முகம்தோன்றிற்று 'உமாஇந்த முடிவுஉனக்கேநல்லா'இருக்கா சொல் உமா சொல் என்று சொல்வது போன்ற பிரமை

## மண்டைதீவு "கலைச்செல்வி"

வேதனைமுட்டி மோத, விம்முகின்ற இதயம் கடைக்கண்ணில் துளிர்த்து நிற்கும் கண்ணீர் துளிகள்- மோகனிடம் தான் சொல்லப்போகும் அந்த அதிர்ச்சியான செய்தியை சொல்வதற்கு துணிவைத் தரும்படி கடவுளிடம் மன்ருடிக் கேட்டுக்கொண்டாள் உமா கொஞ்ச நாட்களாய் சாந்திக்கு உமாவின்போக்கு புரியாத புதிராகவே இருக்கிறது வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடினாலும் அந்தக் குடும்பத்திற்காய் கஷ்டப்பட்டு நெசவடித்து உழைத்தாலும் அவள் முகத்தில் வேதனை ரேகையை காணவே முடியாது ஒன்றன்பின் ஒன்ருய் பெற்று விட்டு அவர்களை ஒழுங்காய் வளர்க்கத் தெரியாமல் உழைப்பதையெல்லாம் குடித்துக் கொண்டு திரியும் அந்தப் பொறுப்பில்லாத தந்தையுடன் போராடும் உமாவோ இப்படி அடக்கமுடியாத சோகமும் நிறைந்து காணப்படுகிருள். ஒருவேளை உமா எனக்காகத்தான்... சாந்தியின் இதயம் ஒருமுறை விம்மித் தணிந்தது நேற்று அவளை பதினேராவது தடவை பெண்பார்க்க வந்தவர்கள் கூறிய வார்த்தை இன்னும் அவள் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது

சாந்தி ஒரு காலத்தில் தானும் மற்றப் பெண்களைப் போல் வாழவேண்டும் என்று நெஞ்சத்தில் ஆயிரம் வண்ண வண்ணக் கனவுகளுடன் வாழ்ந்தது உண்டு அவள் இளம் இதய வீணையை அன்பு எனும் கருவிகொண்டு மீட்டினான் நாகலிங்கம் ஆம்! நாகலிங்கம் அவன் அவளை உயிருக்குயிராய் நேசித்தான் ஆனால் நடந்ததென்ன? தங்கள் காதலுக்கு நடுவில் இருக்கும் சாதிச் சுவரை அந்த சின்ன இதயத்து அன்புக் கரங்களால் தகர்த்தி புதுவாழ்வு அமைப்போம் என்று நினைத்த அவர்கள் இதயக் கரங்களைபே சமுதாயமெனும் கத்தி வெட்டி விட்டது அன்று சாதி சாதியென கத்திய நீதி தெரியாத பெற்றோர்கள்; அவள் காதலைப் பிரித்துவிட்ட சமுதாயம்; இன்று அவளை நெருங்குமா? அதிர்ஷ்டமில்லாதவள், வாழாவெட்டி, என்றெல்லாம் பெயர் சூட்டுகிறது. இளமையிலேயே அவள் மனதில் கொழுந்துவிட்டெரிந்த காதல் சுடரை அணைத்திட்ட சமுதாயம் இன்று அவளுக்கொரு வாழ்க்கை அமைத்துக் கொடுக்குமா? கனவு மலர்கள் மலர்ந்து கருகி இன்று காற்றோடு காற்ருகி விட்டன. நாகலிங்கம் யாரோ ஒருத்தியை மணம் செய்துகொண்டு சந்தோஷமாய் வாழ்கிருன் என்று சாந்தி கேள்விப்பட்டிருக்கிருள். தான் நாகலிங்கத்துக்குச் செய்த பாவத்திற்காய் அவன் நினைவின் நிழலிலேயே காலம்பூரா தனக்கொரு வாழ்க்கை அமைத்துக் கொண்டு வாழ்வோம் என நினைத்தாள் சாந்தி. ஆனால் குடும்ப நிலைமைக்காகவும், தனக்குப் பின்னால் இருக்கும் சகோதரிகளுக்காகவும், அவள் நிச்சயமாய் வாழவேண்டி இருந்தது தனக்காக இல்லை யென்ருலும் மற்றவர்களுக்காகவாவது அந்த வாழ்வையும் ஏற்கத் தயாராய் இருந்தாள் அதிலும் அவளுக்குத் தோல்வி தான்.

வாழ்க்கை என்ருல் சும்மாவா? அன்பிஞல் பிணைக்கப்பட்ட வாழ்க்கையானது இக்காலத்தில் பணத்திஞல் பிணைக்கப்பட்டிருக்கிறது பணம் என்ருல் சும்மாவா! அந்தப் பணத்திற்கு அவள் எங்கே போவாள்? அன்ருடம் சாப்பாட்டிற்கே வக்கில்லை அதற்குள் ஒரு வாழ்க்கையா?

சாந்தி அந்த வீட்டிற்கு மூத்தவள். அவளையடுத்து ராஜன். படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். ஆனால் தொடர்ந்து படிக்க வசதியின்றி கொழும்பில் ஏதோ ஒரு பலசரக்குக் கடையில் நிற்கிருன். அவனையடுத்து உமா. படிப்பை எட்டாம் வகுப்புடன் முடித்துக் கொண்டு உள்ளூரிலேயே நெசவுத் தொழில் செய்கிருள். அவளையடுத்து மூன்று பெண்களும், மூன்று ஆண்களுமாய் ஆறு பேர்கள் கடைக்குட்டி குட்டி பிறந்து ஒரு வருடம்.

அந்தப்பெரிய குடும்பத்தைக் கொண்டு செலுத்தத் தெரியாமல் பொறுப்பில்லாமல் பரமசிவம் குடித்துவிட்டு ஒவ்வொரு நாளும் நாலு காலில் வருவார். கனகத்தின் கண்ணீர் தான் அவரை வரவேற்கும். பரமசிவத்திற்கு அந்தக் குடும்பத்தைப் பற்றி அக்கறை இல்லை சாப்பாடும், குடியும் இருந்தால் போதும்

வேதனை நூலிழை வரைய, விரக்தி அத்தியாயங்களைப் புரட்டிக் கொண்டிருந்தது. மனமெனும் நூல் சிந்தனையில் சூழ்ந்து மறந்து லயித்திருந்த சாந்தி மெல்ல நிமிர்ந்தாள் கண்களிலே வழியை [illegible] கண்ணீர்த் துளியை விரலால் தட்டியபடியே வீட்டினுள்சென்று அந்தப் பெட்டியில் உள்ள நீல நைலெக்ஸ் புடவையை எடுத்து வந்தாள். உமா திண்ணைக் கப்போடு சாய்ந்தபடி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் புடவையுடன் வந்த சாந்தியைக் கண்டு வெகு சிரமப்பட்டு கண்ணீரைத் திரையிட்டுக் கொண்டாள்.

"உமா... உமா...!"

"என்னக்கா...!"

"இந்தா இந்தப் புடவையை இண்டைக்கு நெசவுக்குக் கட்டிக்கொண்டு போ...!" என்றபடி புடவையை நீட்டிஞள் சாந்தி

"எனக்கு வேண்டாமக்கா, எனக்கு இருக்கிற இரண்டு சாறியுமே போதும்..." என்ருள் உமா.

"இல்லை உமா உன்ர நிறத்துக்கு இது நல்லா 'மைச்'பண்ணும். நான் எங்க போறதில எனக்கு சட்டையும் சாறியும்...!" என்ருள் சாந்தி சாந்தியின் வார்த்தையில் விரக்தி கலப்பதை உமா கவனிக்கத் தவறவில்லை.

"நல்லா இருக்கு உன் கதை! உன்ர கலியாணத்துக்கு கடையில் உனக்கு இன்னும் இரண்டு சாறி எடுக்க வேணும் என்டு நான் இருக்கிறன்...!" என்ருள் உமா

"என்ன எனக்கு கல்யாணமா..? அது இந்தப் பிறப்பில எனக்கு இல்லை உமா..."



என்ருள் சாந்தி விரக்தியான சிரிப்புடன்

"அக்கா! அப்பிடியெல்லாம் சொல்லாதே நீ வாழத்தான் போருய்! உன்னைக் கேலியாய்க் கதைச்ச இந்தச் சமூகத்துக்கு முன்னால ஒரு நல்ல கணவனுடன் நீ தலை நிமிர்ந்து நடக்கத்தான் போருய்...!" என்ருள் உறுதியாக உமா

"உமா...!"-பாசம் பொங்க உமாவை அணைத்தாள் சாந்தி. அந்த அணைப்பிலே தன் தியாகத்தை நினைத்துப் பெருமை கொண்டாள் உமா. தன் மார்பிலே சாய்ந்திருக்கும் உமாவின் தலையை வருடியபடியே "உன்னால எப்பிடியம்மா எனக்கு ஒரு வாழ்வைத் தேடித் தரமுடியும்...!"

"என்னுல முடியுமக்கா, நீ கவலைப்படாத...!" உமாவின் பேச்சு போக்கும் சாந்திக்கு என்னவோ போல் இருந்தது.

"உமா சாப்பிடவாம்மா!"

"எனக்கு வேண்டாமக்கா உடம்புக்குச் சரியில்லை நீ போய்ச் சாப்பிடு..." என்றபடியே உள்ளே சென்ருள் உமா. கொஞ்ச நேரத்தின் பின் வெகு சாதாரணமாய் உடுத்திக் கொண்டு வந்து "அக்கா நான் போயிட்டு வாறன்...!" என்ருள் அந்த சோகத்திலும் அவள் அழகு சாந்தியின் கண்ணேபட்டுவிடும் போல் இருந்தது அவளுக்கு திருப்தியாய் கிடைக்காத அந்தப் பாக்கியம் உமாவுக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ந்தாள் சாந்தி. உமாவின் அழகிற்காவது அவளை யாரும் திருமணம் செய்ய முன்வரலாம். ஆனால் நான்!

முன் நெற்றியில் நரைத்த தலைமயிர் ஒன்று விழுந்து அவளை கேலியுடன் பார்த்துச் சிரித்தது அவளுக்குள்ளேயே ஒரு தாழ்வான, அருவருப்பான, அபிப்பிராயம் "ம்... 'நீண்டதொரு பெருமூச்சு! சாந்தி எழுந்து திண்ணைக்கு வந்தாள். அங்கே உமா தன் ஞாபக மறதியால் தன் கொப்பியை விட்டுவிட்டுப்போய்விட்டாள். அதை எடுத்து உள்ளே வைப்பதற்காய் எடுத்தாள் சாந்தி அதிலிருந்து ஒரு கடிதத் துண்டு விழுந்தது சாந்தியின் உடல் ஏனோ அதைக் கண்டு நடுங்கிற்று. நடுங்கும் கரங்களால் அதைக் குனிந்து எடுத்தாள் இருதயம் ஒருமுறை அடித்து ஓய்ந்தது. அக்கம் பக்கம் பார்த்தபடியே பிரித்தாள் நிச்சயமாய் அது உமாவின் கையெழுத்துதான். இவள் யாருக்கு மடல் எழுதியிருக்கிருள்...? மனம் எண்ணத்தில் முந்தியது. சாந்தியின் தலை சுற்றியது. உமாவின் கடிதத்தில் இருந்த ஒவ்வொரு வார்த்தையும் அவள் உயிரையே குடிப்பது போன்ற பிரமை. யார் அந்த மோகன்? உதடுகள் ஒருமுறை திறந்து மூடின 'உமா...' எனத் தன்னையே மறந்து அலறிஞள் சாந்தி எழுத்துக்களை நீர் முத்துக்கள் மறைத்தன. உமாவின் அந்த வசனங்கள் சாந்தியின் செவியில் ஒலித்துக் கொண்டே இருந்தன...'

'மோகன் என்னை மன்னித்துவிடுங்கள்! அன்பிற்கு விலை பேசும் இவ்வுலகில் என் உள்ளத்தை விரும்பினீர்கள்! நான் உங்களை ஏமாற்றி விட்டேன் மோகன் கல்யாண வயசை எட்டிப்பிடித்துக் கொண்டு அதற்காய் ஏங்கி, கனவுகளை தனக்குள்ளேயே சிதைத்துக்கொண்டிருக்கும் என் அக்காவிற்கு முன் நான் எப்படி மணம் செய்யமுடி

(9-ம் பக்கம் பார்க்க)

# கர்வம் கரைகின்றது

'ம்...என்னடி பவளமல்லிகை? உன் மலர்களை எல்லாம்உதிர்த்துக் கொட்டிவிட்டு மொட்டையாக நின்று பெருமூச்சு விடுகின்ருயே... ஐயோ பாவம்! அடுத்தபிறவியிலாவது நம்மைப்போல உயர்ந்த ஜன்மம் எடுத்துக்கொண்டு வா!'

புன்னகையுடன் கேலிசெய்கிருள் ரோஜா.

பவளமல்லிகையோ மோனப் புன்முறுவலுடன் பூமாதேவியையும் சிந்திக்கிடக்கும் தன் மலர்ச் செல்வங்களையும் ஆசையுடன் பார்த்துக்கொள்கிருள். 'ஓ...இந்த ரோஜாவுக்கு ஏன் வீண் வம்பு? நம்மைப்போன்ற கீழ்சாதிகள் 'ஆமாம் அவள் சொல்கிருள் - இருப்பதால் தானே அவள்உயர்ந்தஜன்மமாகக் கணிக்கப்படுகிருள். பாவம் ஏதோ சிறுபிள்ளைத்தனம். போகட்டும்.' பவளமல்லிகை தனக்குள் முணுமுணுத்துக் கொள்கிருள்.

ரோஜா மீண்டும் பேச்சுக்கொடுக்கிருள் 'எங்கள் தலைவர் ஆதவன்மேல் உனக்கென்னடி கோபம்? அவரால்தானே நமக்கெல்லாம் வாழ்வும் வளமும் பெருகுகின்றது உன் மொட்டுக்களை எதற்காக இத்தனை விடியற்காலையிலேயே மலரவைத்து படபடவென்று அந்தக் காய்ந்த, வரண்ட பூமியில் கொட்டிவிடுகிருய். உனக்குத் தெரியுமா? இந்தப் பூமாதேவி பொல்லாத திமிர்பிடித்தவள்! இனிமேலாவது உன் மலர்களை எங்கள் ஆதவனுக்கு அர்ப்பணித்துவிடு'

பவளமல்லிகைமெல்லச்சிரித்[illegible] தலைவருக்கு நீ தான் அர்ப்பணி[illegible]யுங்கள்! ஆனால் நாம் அவர் வரவிற்காகக் காத்திருக்கமாட்டோம் எம்மை அர்ப்பணிக்கவும்மாட்டோம்! அவர் இரக்கமற்றவர்.'

'உஷ். நாவை அடக்கிப் பேசு. அவர் இல்லாமல் இந்த உலகமே இயங்காது தெரியுமா? ஆதவனின் அன்புக் கரம்தான் எம்மை மலர்விக்கின்றது அடுத்து இந்த மனிதர்கள் எத்தனை பெரியவர்கள் தெரியுமா? என்மேல் எவ்வளவு அன்பு கொண்டுள்ளார்கள் தெரியுமா?'

'ஆகா...நீ இன்று அழகாக மலர்ந்து சிரிக்கிருய். ஆதவன் உன்னை வருடிக்கொடுக்கிருன். நாளை கருகியபின் அவனது கரங்கள் உன்னை வருடா

உருவகம்

தடி! சுட்டுப் பொசுக்கிவிடும்! அது மட்டுமா? அதோ அந்த ஆறறிவு மனிதர்கள். ஓ... பெரியவர்கள்! அவர்களின் கரம்பட்டாலே நம் இனத்திற்குத் தோஷம். ஏன் தெரியுமா? பொய்மை நிறைந்து, பொருமை நிறைந்து, வஞ்சசூதுமலிந்து நெஞ்சில் ஒன்றும் நாவில் ஒன்றும் வைத்து இரட்டை நாக்கில் பேசும் போலித்தனம் நிறைந்த பாவிகள் - அவர்களின் கரம்பட்டாலே பாவம்!'

'சீ! இப்படியெல்லாம் பேசாதே உன்னிடம் என்னைப் போல் பகட்டும் அழகும் இல்லையே! உன்னை யாருமே அணைத்து வருவதில்லை, ஆனல் உன்னைக் கோயில் பூசகர் மட்டுந்தான் பறித்துச் செல்வார். ஆனல் என் நிலை அப்படியா? ஓ அந்த வீட்டின் அழகி [illegible]கிருள் பாரேன் என்னி[illegible]ந்தவன் வருகிருள்!'

ரோஜாவும் பவளமல்லிகையும் ஒருசேர நிமிர்கிருர்கள் அந்த அழகு ரோஜா மலரைக் கிள்ளித் தன் கூந்தலில் சூடிக்கொண்டு ஒய்யாரமாகக் காரில் ஏறிப் பறக்கிருள். ரோஜா குதூகலித்துச் சிரிக்கின்ருள்

மாலை மயங்கிக்கொண்டிருக்கிறது. வெளியில் சென்றிருந்த அழகி வீடுவந்து சேருகிருள் அவளது கூந்தலில் வாடி வதங்கி சோர்ந்து துவண்டு போய்க்கிடக்கும் ரோஜாவை அப்படியே எடுத்து சாளரத்திஞடாக வீசியெறிகிருள். கசங்கிய மலராசப் பவளமல்லிகை மலர்களுக்கிடையில் வந்து முகம் குப்புற வீழ்கிருள், ரோஜா. பவளமல்லிகைமலர்கள் தமது அன்னையின் காலடியில் விழிமூடித் தூங்கிக் கிடக்கின்றன. ரோஜா மெல்லத் தலையை நிமிர்த்துகிருள் அவளது கசங்கிய இதழ்கள் முணுமுணுக்கின்றன

'ஓ...இன்று காலை நான் எட்டடியெல்லாம் இம்மலர்களை அவமதித்துவிட்டேன். இப்போ... நான் இருக்கும் நிலை...கடவுளே...என் அகங்காரம், கர்வம், ஆணவம் அனைத்தும் அளித்த பரிசுதானே எனது கசங்கிய தோற்றம்! ம்...இம்மலர்கள் எத்தனை புனிதமானவை! ஆதவனின் கதிர்க்கரம் படாமலே, வண்டினத்தின் இதழ் பதியாமலே மெல்ல மொட்டவிழ்ந்து, மனித இனத்தின் பாபக்கரம் படாமலே தமது மானசீகத் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுத் தம் பிறவியையே பெருமைப்படுத்திவிட்டனவே...'

-ரோஜாவின் முனகல் மெல்லத் தேய்ந்து மறைகிறது. பவளமல்லிகை மொட்டுக்கள் நிறைவும் பெருமையும் தொனிக்கத் தலையைச் சாய்த்துக்கொள்கின்றன.

-மாவை பாரதி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## ஒரு கலைஞன் குரல் கொடுக்கிறன்

உருவம் உள்ளடக்கம் ஆகிய இரண்டையும் சோரம் போகவிட்டு, மலிவு நாடகங்களை மேடையேற்றுபவர்கள் நாடக வளர்ச்சியில் முதல் எதிரிகளாவர். விளம்பரம் தேடும் ஒருவித கஞ்சாமயக்கம் இதற்குக் காரணமாகலாம். சினிமா அப்படியே நாடக மேடையில் பிரதிபண்ணப்படுவதையும், சினிமா நடிகர்கள் மேடையில் மறு அவதாரம் எடுப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இவற்றை பார்வையாளர்கள் ரசிக்காமல் சிரித்துச் சேவிசெய்கிறார்கள் என்பதுதான் உண்மை. நாடகத்தில் சினிமாவைக் காட்டி வெற்றிபெற நினைக்கும் இவர்களின் முயற்சி இவர்களது மூளை விருத்தியின் மீதே சந்தேகத்தைக் கிளப்புகிறது.

மாவை தி. நித்தியானந்தன் இலங்கை கலாச்சாரப்பேரவையில் நிகழ்த்திய உரையில் சிதறிய சில கருத்துக்களை மேற்போந்தவை.

## இலக்கிய அரங்கும் காத்திரமான அவையும்

இராசசேகரனின் 'குருதி மலை' என்ற நாவல் அறிமுக விழாவை அண்மையில் யாழ். இலக்கிய வட்டம் வீரசிங்க மண்டபத்தில் நடாத்திய வேளை, அதைபற்றி செங்கை ஆழியான் ஒரு குறிப்புக் கூறினார். மூன்ஞேடி எழுத்தாளர் சம்பந்தன் போன்ற ஒரு பழுத்த தலைமுறையையும், மறுமலர்ச்சிக் காலம் முதல் பேனா பிடித்த வரதர் போன்றோரின் பரம்பரையையும் இன்றைய டேவிட் ராஜா போன்றோர் பரம்பரையையும் அவையிலே ஒருமிக்கக் காண்பதற்குக் கொடுத்துவைக்க வேண்டுமென்பதே அக்கூற்று. ஆமாம் சம்பந்தன், கவிஞர் சச்சிதானந்தன், கலைச்செல்வி சிற்பி ஐயா, விருது பல பெற்ற சானா சுந்தரம்பிள்ளை, வரதர் செம்பியன் செல்வன், சொக்கன், மயிலங்கூடலூர் நடராஜன் நாடக அரங்கக் கல்லூரி இயக்குநர் குழந்தை சண்முகலிங்கம் கவிஞர்கள் பிரான்சிஸ், லோகநாதன், ஈழநாடு வார ஏட்டாசிரியர் பி. எஸ். பெருமாள், பட்டதாரி ஆசிரியர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உட்பட காத்திரமான பலர் சங்கமித்த 'அசை' கூட்டம் அன்றைய அவையில் அமர்ந்திருந்தது. பாராளுமன்ற பிரதிநிதி யோகேஸ்வரன் அவையில் இருந்தவேளை டொமினிக் ஜீவா பேசிக்கொண்டிருந்தார். 'புஜேக்கிரு'வில் இடமில்லையென்றால் 'அவைக'ளுக்குப் போகாத தமிழ்ப் பெரியார்களை, பேச்சு வீரர்களை, கவிதைமழை பொழிபவர்களை, தண்டமிழ் பேச்சாளர்களை நாம் கண்டதுண்டு. சிலர் இதற்குப் புறநடையாய் வாழ்ந்து காட்டுகிறார்கள். அண்மையில் சிவானந்தனின் நூல் வெளியீட்டு விழாவில் கடைசி வரிசையில் அமர்ந்து உன்னிப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார் உபவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள் ஓர் அழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்த அவையினருடன் தானும் ஒருவராக இருந்த யோகேஸ்வரனின் மனோநிலை தமிழரசங்கள் வரை மிக மிக அவசியம். நிகழ்ச்சி நிரலில் இடம் இல்லை என்றால் பங்குகொள்வதில்லை, அவர் பேச நான் கேட்பதா? என்ற வியாதிகள் களையப்படவேண்டியவை. விளம்பரத்தில் பெயர் அடிக்கப்பட்டபின் தோன்றி இருக்கும் களையும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிற காத்திரமான கூட்டங்கள் இலக்கியகர்த்தாக்களுக்கு கணசமான உற்சாகசக்தியே.

## கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

### 'வெருண்டோடும்' கலைஞர்கள்

அடுத்த பிரிவினர், நாடக உருவத்தை ஓரளவு திறமையாகக் கையாளத் தெரிந்தும், கனமான உள்ளடக்கத்தைக் கண்டு 'வெருண்டு' ஓடுபவர்கள் இவர்கள் மக்களின் ரசனைத்தரத்தில் மாற்றம் கோருபவர்கள் அல்லர். யதார்த்தத்திற்கு சவால்விடுகிற கனவுலகக் கற்பனைப் போக்கால் சமுதாயத்தைத் தூங்கவைப்பவர். 'ரசிகர்கள் இவற்றைத்தான் விரும்புகிறார்கள்' என்பதுதான் இவர்கள் கூறும் பதில். ரசிகர்கள் தரங்கெட்ட கலைப்படைப்புக்களைப் பார்த்துப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நல்ல படைப்புக்களைப் பார்க்கும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படாமையே. இன்றில் வாழும் தவளைக்குக் கிணற்றுச் சுவரில் இருக்கும் உடைவுகள் தான் தலைசிறந்த சித்திரங்களாய்த் தெரியும் நல்ல நாடகங்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தவேண்டிய பொறுப்பு பயில்முறை (அமச்சூர்) நாடகமன்றங்களுக்குரியது.

### புதிய நாடகம் 'உறவுகள்'

நாடக அரங்கக் கல்லூரியின் இவ்வருட முதல் தயாரிப்பாய் அமையும் 'உறவுகள்' என்ற நாடகம் 22-5-80-ல் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற இருக்கிறது 'குழந்தை' சண்முகலிங்கத்தின் ஆக்கம் இது. இவ்வாண்டும் ஆறு நாடகங்களைத் தயாரித்தளிக்க அரங்கக் கல்லூரி முன்வந்துள்ளது.

## அன்பு என்பது...

'அன்பின் ஐந்திணை என்றவிடத்து, அன்பு அறிந்தேனுயின் ஏறே அன்பினுகிய ஐந்திணையும் அறிவது எனின் அது 'குடத்துள் விளக்கும், தடத்துள் வாளும் போல' இதுகாண் அன்பு என்று போதத்திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங் கண்டவிடத்து இவை உண்மையான ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக்கொள்ளற்பாற்று அன்புடையரானகுணம்யாவையோ எனின் - சாவிற்சாதல், நோவிஞேதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல். புணர்வு நனிவேட்டல், பிரிவு நனியிரங்கல் என இவை'

—இறையனர் களவியலுரை.

---

ஞானிகள் மரக்கட்டை அல்லது கல்லைப்போல உணர்ச்சியற்ற ஜடப் பொருட்கள் அல்ல. அவர்கள் தாம் தடுமாற்றம் அற்ற பூரண அன்பை யாவருக்கும் கொடுக்கவல்லவர்கள். 8-ம் நூற்றுண்டில் சங்கரர் அதனை நடைமுறையில் நிரூபித்தார், நமது காலத்தில் ரமண மகரிஷி அதைச் செயலில் காட்டினர்.

# ரமண மகரிஷியும் அவர் அன்னையும்

பேராசிரியர் சர்மா போன்ற சமய சரித்திர ஆசிரியர்கள் 8-ம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆதிசங்கரருக்குப்பின் பகவான் ஸ்ரீரமண மகரிஷி அவர்களே ஞானிகளுக்கு ஓர் உதாரண புருஷராக விளங்கினர் எனத் தயக்கமின்றி எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சிலர் ஞானம் என்பது தேசம் மனம் என்பவற்றோடு முற்றுகத் தொடர்பற்ற நிலையைப் பிழையாகக் கருதுகிறார்கள். மனது உணர்ச்சியற்றதாக இருக்கவேண்டுமெனவும் சாதுகிறார்கள். ஞானிகள் மக்களையும், அவர்கள் செய்யும் கருமங்களையும் ஏனைய உலகப் பொருட்களையும் வெறும் பார்வையாளர் போலவே நோக்குகின்றனர். அவற்றில் நின்றும் அவர்கள் முற்றுகப் பிரிந்தே நிற்கிறார்கள். அவர்கள் தம் இனத்தவர்க்காகவோ ஏனையோருக்காகவோ சாதாரண மக்களைப் போல் உணர்ச்சிவசப்படுவதில்லை.

உண்மை எப்படியோ மறுபக்கமாக உள்ளது. ஞானிகளால்தான் நிலையான பூரண சலனமற்ற அன்பை அவர் இனத்தவர் உட்பட யாவருக்கும் கொடுக்கமுடியும்.

இந்த உண்மையை நாம் விளக்குமுன்பு, முற்காலத்தில் வாழ்ந்த ஞானிகள் தம் தாயாரிடம் வைத்துள்ள அன்புத் தொடர்பை ஆராய்தல் அவசியம். அதற்குப்பின் ரமண மகரிஷிக்கும் அவர் தாயாருக்குமுள்ள தொடர்பை விரிவாக நோக்கலாம்.

தாயாரின் உதாரணத்தை எடுத்துக்கொள்வதற்கு வேதங்கள் அன்னையைத் தெய்வமாக உயர்த்தி வைத்திருப்பது மாத்திரம் காரணமல்ல, தாய்-பிள்ளைத் தொடர்புக்கு உலகில் சமனுன புனிதமான மற்றேர் தொடர்பு இல்லாமல் இருப்பதும் ஒரு காரணமாகும்

ஆதிசங்கரர் சந்நியாசம் எடுத்துக்கொள்ளும் பொழுது தன் தாயாரிடம் அவர் மரண காலத்தில் அவர் தன்னை நினைத்தால் அவர் படுக்கையருகில் தான் நிற்பேன் எனக் கூறினார். அன்னையின் இறுதிக்காலத்தில் அவர் அருகில் நின்றது மாத்திரமல்ல, சந்நியாச தர்மத்தினையும் மீறி சமக்கிரியைகளையும் தாமே செய்தார்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கையில் தன் தாயிடம் அன்பான அக்கறையுடன் நடந்துகொண்ட சம்பவங்கள் பல உள்ளன. ஒரு முறை பிருந்தாவனத்திற்கு அவர் யாத்திரை சென்றிருந்தார். அந்த இடத்தின் தெய்வீக சூழ்நிலை அவரை மிகவும் கவர்ந்தது. அவர் அங்கு நிலையாக வசிக்க விரும்பினார். ஆனால் அவர் மிகத் தயக்கத்துடன் பிருந்தாவனத்தை விட்டு தன் வயது சென்ற தாயாரின் பாதுகாப்புக் கருதித் திரும்பிவந்தார்.

மற்றொரு நிகழ்ச்சி அவர் அன்னை சந்திரதேவி தொடர்பாக நினைவுகூருதற்குரியது அவருடைய சகோதரர்களில் ஒருவர் மிக இளம்வயதிலே இறந்தபோது அந்தச் செய்தி அவர் தாயின் இதயத்தைத் தாக்கிவிடும் என மிகவும் அஞ்சினர். எனவே அவர் இச்செய்தியை அன்னைக்கு அறிவிப்பதற்குப் பதிலாக காளிகோயிலுக்குச் சென்றார். அங்கே காளிதேவியைத் தனது தாய்க்கு இத்துக்க செய்தியைத் தாங்கப் போதிய மனோபலத்தைக் கொடுக்கும்படி பிரார்த்தித்தார்.

இனி ரமண மகரிஷியை நோக்கும்போது, ஆழமும் அன்பும் நிறைந்த தொடர்பு அவர்களிடம் இருந்ததைக் காணமுடிகிறது. ரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும்போது 1898-ல் அவரது அன்னை திருவண்ணுமலைக்கு அவரை அழைத்துவரச் சென்ற நிகழ்ச்சியில் இவ்வித தொடர்பைத் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது.

தன்னுடைய மகனை வாரி விடாத மயிருடனும், அழுக்கு வேட்டியுடனும் கண்ட அன்னையின் இதயம் ஏக்கமுற்றது. அவர் தன்னுடைய மகனைத் திரும்ப அழைத்துச் செல்வதற்குச் சகல உபாயங்களையும் கைக்கொண்டார்.

**ஆங்கில மூலம்: ஏ. ஆர். நடராஜன்**
**தமிழில்: வ. குகசர்மா**

ரமணர் அப்போது மௌனம் அனுட்டித்துவந்தார். எனவே அவர் ஒரு தாளில் தமிழில் பின்வருமாறு எழுதிக் காட்டினார் "இறைவன் எங்கும் இருக்கிறார். அவர் நமது செயல்களுக்கெல்லாம் தக்க காலத்தில் பலன் கொடுத்து வருகிறார். நடக்க முடியாதது எவ்வளவு முயற்சித்தாலும் ஒரு காலமும் நடவாது. நடப்பது நடந்தே திரும் அதைத் தடுக்க முடியாது. எனவே உங்கள் முயற்சியைக் கைவிட்டுச் செல்வதே நல்லது."

தான் திரும்பிப் போவது சாத்தியமில்லை என்பதை அறிந்த ரமணர் தாய்க்குச் சிறந்த புத்திமதி அளிப்பதே சிறந்த வழியெனக் கண்டார்.

1914-ம் ஆண்டு ரமணரின் அன்னை திருப்பதி ஆலயத்திற்கு சென்று வரும் வழியில் ரமணருடன் சிறிது காலம் தங்கினார். அருணசலமலையில் விருபாக்ஷா என்னும் குகையில் ரமணர் அப்போது வசித்தார். அப்போது அன்னைக்கு நெருப்புக் காய்ச்சல் நோய் வந்தது. அவருடைய நிலை ஆபத்தானதாக மாறியபோது பகவான் ரமணர் மனதை உருக்கும் பல பாடல்களை தமிழில் ஆக்கினார். அவை அன்னையின் நோயை குணமாக்கும்படி இறைவனை வேண்டும் பாடல்கள். அவரின் அன்னை அழகம்மாவின் நோய் குணமாயது என்று சொல்லத்தேவையில்லை.

1916-ம் ஆண்டிற்கும் 1922-ம் ஆண்டிற்கும் இடையில் சில வருடங்கள் அவர் அன்னை திருவண்ணுமலையில் மகனுடனே வசித்தார். அந்நாட்களில் தாயின் ஆன்ம முன்னேற்றத்தில் அவர் அதிக கவனம் செலுத்தினர். அவரை விடுதலைக்கும் தயாராக்கினார்.

தனது மகன் ஒரு வீடு கட்டி அங்கே ஒரு முறை வந்து போகும்படி அழைத்தும் பகவான் ரமணர் அங்கு செல்லவில்லை. மகனிடம் அவருக்கு ஏற்பட்ட இப்பிணைப்பு அவரை ஒரு சிறிய காலம் கூட பிரிய இடம் கொடுக்கவில்லை. அவர் பகவான் ரமணருக்கு பின்வருமாறு சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது "நீ என்னுடைய உடலை முட்டபடுத்தாமற்று இறந்தாலும் நல்ல உன்னுடைய கைகளிலே என் உயிரை விடுவேன்".

பகவான் ரமணர் தம்முடைய தாயின் ஆன்ம முன்னேற்றத்திற்கு வேண்டியவற்றைச் செய்துவந்தார் அவருடைய ஞான வளர்ச்சிக்கு ஏற்ற பாடல்களை ஆக்கினார். அவற்றுள் "அப்பளப் பாட்டு" என்னும் பாடல் மிகவும் பிரசித்தி பெற்றது.

1922-ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி ரமணரின் அன்னைக்கும் நோய்வாய்ப்பட்டார். பகவான் ரமணர் தமது அன்னைக்கு நேரம் வந்துவிட்டது என்பதை அறிந்துகொண்டார். அவர் அன்னையின் பக்கத்தில் அமர்ந்துகொண்டார். தமது வலது கையை அவர் மார்பிலும், இடது கையை அவர் தலையிலும் வைத்துக் கொண்டார். அந்த தினம் இரவு எட்டுமணியளவில் அழகம்மா சமாதியடைந்தார். யாரோ ஒருவர் அவர் இறந்துவிட்டதாகக் கூறியதும் அவர் சுகமாக 'உறிஞ்சப்பட்டார்' எனக் கூறினர் அவர் மேலும் விளக்கிக் கூறுகையில் "எனது கைகள் அவருடைய தலையிலும் இருதயத்திலும் தங்கியிருக்கும்போது நுண்மையான சென்ற காலங்களின் ஞாபகங்கள் சற்கல நடிப்புக்களுக்கு காரணமானவை, அவை அவருக்கு முன் அவர் உணர்வில் உருண்டுசென்றன. அந்த உணர்வுகள் போன பின்பு, தொடர்பான மறுபிறவியை இல்லாமற் செய்யத் தக்கதும், இறைவனோடு சேர்த்துவைப் பதுமாகிய பலவித அநுபவங்

(9-ம் பக்கம் பார்க்க)

## பாட்டிகள்

ஔவை என்பாள் ஒரு பாட்டி-அவள்
அழகு தமிழின் பெருமாட்டி
குந்தி என்பாள் ஒரு பாட்டி-ஐந்து
குழந்தைகள் பெற்ற திருவாட்டி
காந்தாரி என்பாள் ஒரு பாட்டி-நூறை
ஈன்றெடுத்த பேயாட்டி
கூனிக்கிழவியும் ஒரு பாட்டி-அவள்
குடியைக் கெடுத்த கோமாட்டி
வந்தி என்பாள் ஒரு பாட்டி-பிட்டுத்
தந்தே பிடுறு பெரும் பாட்டி!
இந்திரா என்பாள் ஒரு பாட்டி-அவள்
இந்தியாவை ஆளும் சீமாட்டி
யாரும் விரும்பா ஒரு பாட்டி-அவள்
வாழ்வைக் கெடுக்கும் வைப்பாட்டி

-பா. கிரான்ஜீவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பல் வைத்தியம்-12

# பற்களும் முக அழகும்

பற்கள் ஒழுங்கீனமாகவோ, மிதப்பாகவோ முளைப்பது தலைமுறை வழியாகத் தொடரும் என்பது பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தோமல்லவா! இதைவிடக் குழந்தைகளின் பழக்கங்களாலும் பெற்றோரின் கவனக்குறைவாலுங்கூட இந்த நிலை ஏற்படுகிறது. பாற்பற்கள் முளைக்கும் பொழுது அவற்றின் ஒழுங்குநிலை பற்றி ஒருவரும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் குழந்தைகளின் தொடர்ச்சியான சில பழக்கங்கள் மேல்வாய் அலகின் அமைப்பையே மாற்றிவிடக்கூடும். இது பின்னர் நிலையான பற்கள் மிதப்பாகவோ அன்றி ஒழுங்கீனமாகவோ முளைப்பதற்கு வழி வகுக்கின்றது. முதன் முதலில் பற்கள் இல்லாத அலகிலே பற்கள் முளைக்கத் தொடங்கியதும் அவைகளின் வளர்ச்சி, அவைகளைச் சூழ்ந்திருக்கும் மென்றசை உறுப்புகளின் தன்மையிலும் பழக்கங்களிலும் ஓரளவு தங்கியிருக்கின்றது. ஆகவே குழந்தைகளின் பழக்கங்களை (உதடு - விரல் சூப்புதல் - நகம் கடித்தல்) பெற்றோர் அவதானித்து வருதல் வேண்டும்.

சிறுபிள்ளைகளாயிருக்கும் போது பெற்றோர்கள் மேலே கூறிய மாற்றங்களையேனும் குறைபாடுகளையேனும் சிந்திக்காமலும், இந்நிலைத்திடத்தும் போதிய காப்புச் செய்யாமையாலும் வருவதைப் பற்றிக் கவலை கொள்ளாதிருந்து விட்டு அப்பிள்ளைகள் வளர்ந்தபின்பு அந்நிலையை எண்ணியெண்ணிக் கவலைப்படுகின்றனர். இந்நிலைக்குப் பெற்றோரின் சிரத்தைக் குறைவும் ஒரு முக்கிய காரணமாகும். பெற்றோரிற் சிலர் இயற்கை தந்த பல் சிறந்த பலனைக் கொடுக்கும். இளம் பருவத்திலே இக்குறைபாடுகளை அவதானித்துத் திருத்துவிக்காது விட்டு, இருபது இருபத்தைந்து வயது வந்த பெண்பிள்ளைகளைப் பெற்றோர் எம்மிடம் கூட்டி வந்து, "பற்களை இயன்றளவு சரிப்பண்ணி, வடிவாக்கிவிட வேண்டும்", என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு இந்த வைத்தியமுறை பற்றிய அறிவுக் குறைவை இது காட்டுகிறது. இத்துணை வயது வரும் வரையும் இதனைப்பற்றிச் சிந்தியாத பெற்றோர் மணமகனைத் தேடும் பருவம் நெருங்கி வந்ததும் தம் புதல்வியரின் தோற்றத்தை அழகு செய்ய வேண்டும் என்று உணர்ந்து வருகிறார்கள். ஆனால் "ஐந்தில வளையாதது ஐம்பதில வளையுமா?" என்ற பழமொழிக்கிணங்க இந்த வைத்திய முறை வயது ஏறிய நிலையில் நல்ல மாற்றம் ஒன்றைத்தானும் செய்யாது. இந்த வைத்திய முறையின் இயல்புகளையும், இதனால் உண்டாகும் பயன்களையும் விளக்குகின்றோமாதலின் பெற்றோர்கள் இனியாவது பிள்ளைகளிடம் முகக் குறைபாடுகள் ஏற்பட்டால் அவற்றை உரிய காலத்தில் காட்டி பரிபூரணமான மாற்றம் செய்வித்தல் வேண்டும்.

### நிலையான பற்கள் முளைத்துவரும்பொழுது எப்படி பல் வரிசையில் ஒழுங்கீனம் ஏற்படுகிறது?

பற்களுக்கிடையில் வெளியுண்டாதலும் பற்கள் நெருக்கமடைதலும்:-

முதலாவது கடைவாய்ப் பல் ஆறுவது அல்லது ஏழாவது வயதில் முளைக்கும். அதைத் தொடர்ந்து வெட்டுப் பற்கள் முளைக்கும். இவற்றை யடுத்துக் கூர்மைப் பற்களும் அரைத்தற் பற்களும் முறையே பதின்மூன்று பதினைந்து ஆண்டுகளில் முளைக்கும். இருபக்கத்து முதற்கடைவாய்ப் பற்களுக்கிடையில் உள்ள வெளி நான்கு வெட்டுப் பற்களையும் இரண்டு கூர்மைப் பற்களையும் நான்கு அரைத்தற் பற்களையும் அடக்கி வைத்திருக்கும். இப் பற்களின் அகலம் பருமைகளின் தன்மைக்கும் பற்களைத் தாங்கும் அலகின் வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மேற்கூறிய பற்களின் மொத்த அகலத்திற்கும் அவற்றைத் தாங்கும் அலகின் அளவிற்கும் வேறுபாடு உண்டாகுமாயின் பல்நெருக்கமாவது (Crowding of Teeth) அல்லது பற்களுக்கிடையில் இடைவெளியாவது (Spacing of Teeth) தோன்றும். இவ்வியல்பு தலைமுறையுரிமையாக வரும். பற்கள் ஒழுங்கு வரிசையில் முளைக்காதிருந்ததற்கு வேறு காரணங்களும் உண்டு. இனி அவற்றை ஆராய்வோம்.

பல்வைத்திய கலாநிதி **பா. சோ. பாரதி**

வழமைப்படி மாற்றியமைக்கக் கூடாதென்ற மூடநம்பிக்கையால் பல்வைத்தியரை அணுகுவதில்லை வேறு சிலர். ஒழுங்கற்ற பற்களை ஒழுங்காக மாற்றி அமைத்தல் கண், மூக்கு முதலிய உறுப்புக்களுக்குக் கேடு விளைவிக்கும் என்னும் மூட நம்பிக்கையாலும் வைத்தியம் செய்விக்காது விடுகின்றார்கள். பலர், "எம்பிள்ளைகள் வளர்ந்த பின்பு செய்விப்போம், இப்பொழுது வேண்டியதில்லை" என்று எண்ணிச் சிகிச்சையைப் பிற்போடுகின்றனர்.

### இச்சிகிச்சை கூடிய பலனை அளிக்குங் காலம்

குழந்தைகளின் பாற்பற்கள் விழுந்து நிலைப் பற்கள் முளைக்கத் தொடங்கியதும் (6 வயது-8 வயது) பல் வைத்தியரை அணுகி அவரின் ஆலோசனைகளைக் கேட்டல் வேண்டும். நிலைப் பற்கள் வரிசை மாறி முன்பின்னாய் முளைக்கத் தொடங்குவதை அவரிடங் காட்டிக் கொள்ள வேண்டும். பாற்பற்கள் இருக்கும்போது குழந்தையின் பழக்கங்கள் வேறுபட்டிருப்பதை அறிந்தாலும் அவரிடம் ஆலோசனை பெறுதல் வேண்டும். ஒழுங்கீனம் வந்த பின்பு மாற்றுவதை விட வருமுன்பு காப்புச் செய்வது நல்லது என்பதற்காகவே இப்படிச் செய்வித்தல் வேண்டும்.

பெரும்பாலும் பத்து முதற் பதினைந்து வயது வரையும் இச்சிகிச்சை முறை மிகச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

### பாற்பற்கள் நேரகாலத்திற்கு விழாதிருத்தல்

பாற்பற்கள் ஒரு குறித்த காலத்திற்குச் சேவை செய்த பின்பு அவற்றின் வேர் கரைந்து அவை அலகிலின்றும் கழன்று விடுகின்றன. இது இயற்கையான நிகழ்ச்சி. ஒரு வகை ஒழுங்கு முறையுடன் இவை விழுதலால் நிலைப்பற்களும் ஒழுங்காக முளைக்கின்றன. ஆனால் பாற்பற்கள் காலந்தாழ்த்தி விழுதலினால் நிலைப்பற்கள் உதட்டுப்பக்கமாகவாயினும் அல்லது எதிர்ப் பக்கமாகவாயினும் முளைக்கின்றன. இதனால் ஒழுங்கற்ற பல்வரிசை உண்டாகிறது.

### 1. மேலதிக பற்கள் அலகில் முளைத்தல்

(Supernumerary Teeth Supplimentary Teeth)

மேலதிகப் பற்கள் அலகின் எப்பகுதியிலாயினும் தோன்றக் கூடும். இவை நிலைப்பற்களை ஒத்திருக்கும் தோற்றத்திற் சிறியனவாக இருந்தாலும் பெரும்பாலும் மேல்வாய்ப் பகுதியில் உள்ள நிலையான பற்களை நிலைமாற்றஞ் செய்யவும், திரும்பச் செய்யவும் ஏதுவாக இருக்கின்றன. இரண்டு நிலைப்பற்களின் இடையே தோன்றும் மேலதிகப் பல் இடைவெளியை உண்டாக்குகின்றது. அநேகமாக முதலாவது வெட்டுப் பற்களுக்கிடையில் இப்படியான மேலதிகப் பற்கள் தோன்றுகின்றன.

(தொடரும்)

---

## அத்தியாயம் [1]

# நிர்ப்பந்தங்கள்

## குறுநாவல்



வெளியே மழை "சோ" என்ற பேரிரைச்சலுடன் பெரிதாகப் பொழிந்து கொட்டிக்கொண்டிருப்பது பற்றியோ அல்லது நேரம் நள்ளிரவை அண்மித்துக்கொண்டிருப்பது பற்றியோ உள்ளேயிருந்த யாரும் சிறிதுகூடக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பல்கலைக் கழக வளாகத்தின் வைத்திய பீடச் சிற்றுண்டிச் சாலையில்- மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட மின் ஒளி விளக்குகளின் நடுவில்- நடைபெற்றுக் கொண்டிருக்கும் அந்த விளையாட்டில் பலர் தம்மை மறந்து ஈடுபட்டிருக்க, மீதமாயிருந்த சிலரும் கூட அதைப் பார்த்து ரசிப்பதிலும், கைதட்டி ஆரவாரம் செய்வதிலும், கேலி பேசுவதிலும், ஒன்றிப்போய் அமர்ந்திருக்கிறார்கள். மஞ்சு மட்டும் அந்தக் கூட்டத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாத ஒரு ஜீவனைப்போல் அசுவாரசியத்துடன் ஒரு மூலையில் ஒடுங்கியிருக்க, நித்திரை தான் கண்ணைச் சுழற்றி அடித்துக் கொண்டு வருகிறது. எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்து அணு அணுவாய் ரசித்து மகிழும் வாழ்க்கையின் இதுபோன்ற சில மணித்தியாலங்கள், அவளுக்கு மாத்திரம் "போர்" அடிக்கும் நேரங்களாய்த் தெரிவது அவளுக்கே ஆச்சரியமாயிருக்கிறது. பலருக்குப் பிடிப்பது எல்லோருக்குமே பிடிப்பதாக மாறிவிடுமா என்ன? கண்ணைக் கசக்கிவிட்டுக்கொண்டு பாரதியைத் தேடும்போது அவள் கூட "மியூசிக்" போட்டுக்கொண்டிருக்கும் பாலுவிடம் ஏதோ கதைத்துக்கொண்டிருக்கிறாள். மைதானத்திலே, விளையாட்டில் சேரப்போகும் முப்பது ஜோடிகளும் வட்டமான பாதை ஒன்றில் நின்றுகொண்டிருக்க, இருபத்தொன்பது கடதாசி அட்டைகள் அந்த வட்டப்பாதையில் வைக்கப்படுகின்றன. சங்கீதக் கதிரையின் தத்துவ அடிப்படையில் மியூசிக் ஆரம்பமாகும்போது, ஒவ்வொரு ஜோடியும் கைகோர்த்து நடனமாடியபடியே பாதையில் சுற்றி வருகிறார்கள். பார்வையாளர் மத்தியில் இருந்து இடையிடையே ஒவ்வொரு ஜோடிக்கும் "கொமென்ற்ஸ்" உதிர்க்கப்படுகிறது.

"கோபு! உன்னை உயரம் கட்டையாய்ப் போச்சடா" அவனின்றை ஒண்டரை அங்குல 'கீல்ஸ்' ஐக் கழட்டச் சொல்லு!" என்று ஒரு குரல் மூலையில் கேட்கும்போதே,

"ராஜன்! வெட்கப்படாதையடா! இன்னும் கொஞ்சம் கிட்டப்போய் வடிவாப் பிடிச்சுக்கொண்டு டான்ஸ்பண்ணு' என்று வேறொரு குரல் கேட்கிறது.

இந்த விமர்சனங்கள் எதையும் லட்சியம் செய்யாமல் அவற்றிற்கு மிகவும் பழக்கப்பட்டவர்கள் போல அவர்கள் ஆடிக்கொண்டிருக்கும் போது, "மியூசிக்" திடீரென நிற்பாட்டப்படுகிறது. ஒவ்வொரு ஜோடியும் அவசரமாக ஓடிப்போய் ஒவ்வொரு அட்டைத் துண்டுகளில் நின்றுகொள்ள நீலு-பாபு ஜோடி இடம் கிடைக்காமல் விளையாட்டிலிருந்து வெளியேறுகிறது.

"பாபு... கார்ட் பெல்ற் கொண்டோலன்சஸ்! ஐயோ பாவம்!" என்று கேலியாக ஒரு குரல்.

மியூசிக் தொடரும் போது அட்டைகளின் எண்ணிக்கையில் மேலும் ஒன்று குறைக்கப்படுவதுடன் அட்டையின் அளவும் அரைவாசியாக்கப்படுகிறது. மியூசிக் போட்டுக் கொண்டிருக்கும் பாலுவைப் பார்க்கிறபோது, விளையாட்டில் கலந்துகொள்ளாமல் வெளியில் நின்றுகொண்டிருந்தாலும் தனது பிடித்தமின்மையை வெளிக்காட்டிக்கொள்ளாமல் உற்சாகமாக "றெக்கோர்ட்" போட்டுக்கொண்டிருக்கும் அந்தத் திறமையான நாசூக்கை மஞ்சுவால் மனதிற் பாராட்டவே முடிகிறது. அவளுக்கு மட்டும் இப்படிப் போலியாக ரசிக்கவும், ரசிப்பது போல நடிக்கவும் தெரியவில்லையே!

இந்தமுறை சங்கீதம் நிற்கும்போது அட்டையில் "நாலு கால்" வைக்கக்கூடிய இடம் மட்டுமே இருக்க, போர்ட்டுக்கு வெளியே நிலத்தில் கால் பட்டால் அந்த ஜோடி விளையாட்டிலிருந்து விலக்கப்படும் என்ற மத்தியஸ்தரின் அறிவிப்பைத் தொடர்ந்து, அந்தச் சிறிய அட்டையில் கால்களை நெருக்கமாக வைக்க முனைந்து, அவர்கள் ஒருவரை ஒருவர் உரசினாற்போல் நின்றுகொள்வதைப்பார்க்கும் போது மஞ்சுவின் உடலெல்லாம் கூசிப் போகிறது. "இதயம்" பக்-பக்கென்று அடித்துக்கொள்கிறது. இங்கே இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் அவளுக்கே இப்படி வியர்த்துக் கொட்டினால் அங்கே நின்றுகொண்டிருக்கும் அந்த மாணவிகளின் உணர்வுகள் எப்படி இருக்கும்? அவர்களுடைய மனதில் விகற்பமான எண்ணங்கள் எதுவும் தோன்றாமல் 'வெறும் விளையாட்டு' என்ற உணர்வே நிரம்பி இருப்பதால் மனம் அமைதியாக இருக்குமோ? அவள்தான் வக்கரித்த நினைவுகளால் தடுமாறுகிறாளா? என்னதான் விளையாட்டு என்று நினைத்தாலும், ஒரு ஆணுக்கு மிக அருகில் இருக்கிறோம் என்ற நினைவில் ஒரு அருவருப்பும் சங்கடமும் தோன்றாதா?

"என்னடி மஞ்சு! இப்ப கூடவே யோசனை? விளையாட்டைப் பாக்கிறியோ, அல்லாட்டிக் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறியோ?" என்று அவள் தோளில் தட்டிய பாரதி, அவளுக்குப் பக்கத்தில் ஒரு கதிரையை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்துகொள்கிறாள்.

"உந்த கோமாளிக் கூத்துக்கெல்லாம் நான் வரேல்லை. நீ வேணுமென்டால் போ" என்று பிடிவாதமாக மறுத்திருந்த மஞ்சுவை,

'இது எங்கடை கொலிஜ் கெற் ருகெதர்... எங்களுக்குப் பிடிக்குதோ பிடிக்கேல்லையோ உலகத்தோடை ஒத்துவாழத் தெரியவேணும். கேம்ஸிலை கலந்துகொண்டாலும் சும்மா வந்து பார்த்துக்கொண்டிருக்கிறதிலை உனக்கு என்ன குறைஞ்சிடப்போகுது!' என்று சொல்லி வலுக்கட்டாயமாக வற்புறுத்தி இழுத்துவந்தது இந்தப் பாரதிதான்.

பாரதி கேட்டதற்குப் பதில் சொல்லாமலே "ப்ளோரை"ப் பார்த்துக்கொண்டிருக்கிறாள் மஞ்சு. இன்னும் பத்து ஜோடிகள் 'அவுட்' ஆகாமல் நின்றுகொண்டிருக்க "போர்ட்"இல் இப்போது இரண்டு கால் வைக்கவே போதுமான இடம் இருக்கிறது. ஆணும் பெண்ணும் ஒற்றைக்காலை உயர்த்தி ஒருபுறமாக நீட்டி ஒற்றைக் காலில் நிற்க எத்தனிக்கும் போது தடுமாறி கால் நிலத்தில் பட்டுவிட்ட மூன்று ஜோடிகள் வெளியேற்றப்படுகின்றன. ஏனைய ஜோடிகள் எல்லாம், தாம்தான் வெற்றி பெறப்போகிறோம் என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் போல்-பெண்ணின் இடையை ஆண் வளைத்து இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு சிரித்தமுகத்துடன் ஒற்றைக் கால்களில் நிற்க மியூசிக் மறுபடியும் ஆரம்பமாகிறது.



**கோகிலா மகேந்திரன்**

[6ம் பக்கம் பார்க்க]

# இலங்கையில் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி (1)

எஸ். பத்மநாதன்
பீ. ஏ. (சிறப்பு) டிப் இன் எட் (இலங்கை)



## அறிமுகம்

'கல்விப் புதுமைகள்' மூலம் பொருளாதார அமைப்புக்களையே மாற்றிவரும் வளர்முக நாடுகளுள் இலங்கையில், 1972-ம் ஆண்டளவில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தமானது, கடந்த காலக் கல்வி வரலாற்றையே மாற்றியமைத்துவிட்டது எனலாம். இக்கால கட்டத்தில் ஏற்பட்ட கல்வி விரிவும், வளர்ச்சியும் இணைந்து பரீட்சை முறைகள், நிர்வாக அமைப்புக்கள், பாடவிதானங்கள், ஆசிரியர் பயிற்சிகள், கற்பித்தல் முறைகள் போன்ற பல்வேறு கல்விக் கூறுகளையும் தொழிற்பாடுகளையும் முற்றாக மாற்றியமைத்துவிட்டன எனலாம்.

'சேவைக்காலப் பயிற்சி' என்பதன் எண்ணக் கருவானது ஓர் ஆசிரியர் நியமனம் பெற்ற காலத்திலிருந்து சிறப்பாகக் கற்பித்து ஓய்வு பெறும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொண்டிருத்தலைக் குறிக்கும். சொந்தமாக நூல்களை வாசித்தல், பேச்சுகளிலும், கருத்தரங்குகளிலும், உரையாடல்களிலும் கலந்துகொள்ளல், வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டல், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடல், சிறந்த அதிபர்களிடமிருந்தும் ஆசிரியர்களிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெறுதல் என்பவற்றினை இது உள்ளடக்கியிருப்பினும், நிறுவனரீதியான சேவைக்காலப் பயிற்சியே இவற்றுள் முதன்மை பெறக்கூடிய கட்டுக்கோப்பும் ஒழுங்கமைப்பும் பெற்றதாகும். இலங்கையில் கல்வியமைச்சின் துணை நிறுவனமாக பாடவிதான அபிவிருத்தி நிலையம் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களைத் திட்டமிட்டு நடத்தி வருகின்றது.

பாடவிதான நிலையத்தில் பயிற்சிபெற்று 1974-ம் ஆண்டு முதல் நுவரெலியா, பண்டாரவளை, பதுளை, மொனராகலை ஆகிய கல்விப் பிராந்தியங்களுக்கான சமூகக் கல்வி ஆலோசகராக நியமனம் பெற்றமையும், அதனால் கிடைக்கப்பெற்ற அனுபவங்களுமே இக்கட்டுரை ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டின எனலாம். பொருத்தமான - பிடித்தமான வேலையொன்றில் பழகிவிட்ட - பண்படுத்தப்பட்ட எனது உளநிலையில் இது பொருத்தமானதொரு ஆய்வாயிற்று.

இவ் ஆய்வினை தரமான முறையில் எழுதுவதற்கு தரமான - பொருத்தமான நல்ல கருத்துக்களை வழங்கிய கல்வியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

### சேவைக்காலப் பயிற்சியின் பின்னணி

1947-ம் ஆண்டு இலங்கையின் கல்வித்திட்டத்தில் புதியதொரு அத்தியாயம் ஆரம்பித்தது. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம்வரை இலவசக் கல்வி மேற்கூறிய ஆண்டிலிருந்துதான் ஆரம்பித்தது. இதன் விளைவினால் ஏற்பட்ட கல்வித்துறையின் மகத்தான விரிவு இன்று பல்வேறு ஆசிரிய நியமனங்கள், கட்டடங்களின் அவசரத்தேவைகள், உபகரணங்களின் அவசியநிலை, நூல்கள் வெளியிடுதலில் தாமதம், பரீட்சைகள் நடத்துவதில் அதிதீவிரம் போன்ற பல்வேறு துறைகளையும் நெருக்கடிக்குள்ளாக்கியதொரு இமாலயப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவற்றில் தலையாய பிரச்சினை இலவசக் கல்வியின் தாக்கத்தினால் பெருகிய மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமனம் செய்வதில் தலைதூக்கியுள்ளது.

1978-ம் ஆண்டில் 9460 பாடசாலைகளில் 14, 62, 147 மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர்; 1,24,000 ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளனர். இவர்களுள் 20,000 பேர் பட்டதாரிகள்; 70,000 பேர் பயிற்றப்பட்டோர்; 34,000 ஆசிரியர்கள் எதுவித பயிற்சியற்றவர்களுமாகக் காணப்பட்டனர். 1 இதிலிருந்து ஆசிரியர்களுக்கான முன் பயிற்சி சேவையின் ஆரம்பத்தில் பெருமளவு வழங்கப்படவில்லை என்பது புலனாகின்றது. படம் I

1970-ம் ஆண்டு ஆட்சித் தாபனத்தில் ஏற்பட்ட மாற்றம் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தினையே உண்டுபண்ணியது எனலாம். பதவிக்கு வந்த புதிய அரசு சமூக-பொருளாதார விளைவுகள் பலவற்றை எதிர்நோக்கிற்று. இளைஞர்களினால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாகத் திட்டமிட முனைந்தது. 'கல்வி அடிப்படையில் தாயைய உலகிற்காகும்' என்பது இவர்கள் கோட்பாடாயிற்று. "அறிவு வெடிப்புநிலை எமது பாடவிதானங்களை மிகவும் அருமையாகப் பாதித்துள்ளது. இந்தப் புது மாற்றத்தினை ஏற்படுத்த ஒரு வழி, சுயமான கற்றலுக்கு ஒழுங்கு செய்வதாகும். நாம் கற்றல்சிரமத்தில் ஆசிரியமையக் கொள்கையினைப் பின்பற்றியுள்ளதால் இந்தப் புதுத்துறையை அருமையாகவே தொட்டுள்ளோம்." என்ற கலாநிதி உடகம அவர்களின் கருத்து நினைவுகூரற்பாலது. புதிய ஆட்சியின்போது கல்வி அமைச்சர் தனது முதல்நாள் உரையில் "எல்லா ஆசிரியர்களையும் பயிற்சிபெற்றவர்களாக மாற்றுவதேஎனது முதல் நோக்கம்" என்று கூறியுள்ளார். இக்கூற்று ஆசிரிய பயிற்சிபற்றி அமைச்சர் கொண்ட முடிவு மட்டுமன்றி கல்வி உலகிற்குத் தேவையானதொன்றாகவும் இருந்தது.

1972-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கல்வித்திட்டம் நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளையும், எதிர்கால பொருளாதார வளர்ச்சியின் தேவைகளையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்டது எனலாம். இடைநிலைக் கல்வியில்தான் உடனடியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இடைநிலைக் கல்வி என்பது 6-ம் வகுப்புத்தொடக்கம் 9-ம் வகுப்புவரை இடம்பெறவேண்டியதொன்றாயிருந்தது. 10 வயதிற்கும் 19 வயதிற்கும்இடைப்பட்ட மாணவர்களே இங்கு முக்கியம்பெறுவர். சமுதாய பொருளாதார அரங்கில் கல்வியின் பயனை பரவலாகவும், விரைவாகவும் பிரதிபலிக்கச் செய்யக்கூடியவர்கள் இவர்களே. ஆகவேதான் கல்வியில் புதிய மாறுதல்களின் விரைவான பயனைப்பெறவேண்டுமெனில் இந்நிலையில் மாற்றம் வேண்டும் என உணரப்பட்டது.

இடைநிலைக் கல்வி, கனிஷ்ட இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலைக் கல்வி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கனிஷ்ட இடைநிலைக் கல்வி என்பது 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரையும், சிரேஷ்ட இடைநிலைக் கல்வி என்பது 10-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரையும் ஏற்படுத்தப்பட்டது. எனவே, புதிய கல்வித் திட்டம் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது.

(அ) ஆரம்பக் கல்வி 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை வயது 6 - 10

(ஆ) கனிஷ்ட இடைநிலை 6-ம் வகுப்பு முதல் 9-ம்வகுப்பு வரை; வயது 11 - 14

(இ) சிரேஷ்ட இடைநிலை 10-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்புவரை; வயது 15 - 16

1972-ம் ஆண்டு ஜனவரி 6-ம் வகுப்பில் ஆரம்பிக்கப்பட்ட கனிஷ்ட இடைநிலைச் சீர்திருத்தங்கள் 1975-ம் ஆண்டு டிசம்பரில் முடிவு பெறும். எனவே இடைநிலைச் சீர்திருத்தங்கள் 1976-ம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கின்றன. இது வெளிநாட்டு முறையைப் பின்பற்றி 5-3-2 (2) என்ற முறையில் இருந்து 5-4-2-1 என்ற நிலைக்கு மாற்றப்பட்டது. அதாவது 9 வருடங்கள் ஆரம்ப, கனிஷ்ட இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலைக் கல்வி என்பன இடம் பெறும். பல்கலைக் கழக அனுமதி பெறுபவர்கள் 1 வருடம் அடிப்படைக் கல்வி பெறுவார்கள். 1972-ம் ஆண்டு நடைபெறும் 6-ம் வகுப்புச் சீர்திருத்தம் 1973-ம் ஆண்டு 7-ம் வகுப்பிலும் தொடர்ந்து 1975-ம் ஆண்டு 9-ம் வகுப்பிலும் இடம்பெறும். இது ஆரம்பக் கல்வியிலிருந்து முழுவதினையும் மாற்றும் திட்டத்திற்கு வழி வகுத்தது. இதேபோல ஆரம்பக் கல்வி 1974-ம் ஆண்டு 1-ம் வகுப்பிலும் 1975-ம் ஆண்டு 2-ம் வகுப்பிலும் தொடர்ந்து 1978-ம் ஆண்டு 5-ம் வகுப்பிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

1960-ம் ஆண்டு பாடசாலைகள் தேசிய மயமாகின. வெளியீடும் 1972-ல் பாடங்களும் தேசியமயமாக்கப்பட்டன. அதாவது முதன்முறையாக ஒரு தேசியக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டது. 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை 4 ஆண்டுகளுக்கு புதிய பாடவிதானம் போதிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வியும், கனிஷ்ட இடைநிலைக் கல்வியையும் இணைத்து ஒன்பது ஆண்டுக் கல்வி அமுலுக்கு வந்தது. இதனால் இப்புதிய ஒன்பது ஆண்டுக் கல்வி 6 வயதிற்கும் 17 வயதிற்கும் உட்பட்ட அனைவர்க்கும் பாகுபாடின்றிப் பொதுவானதாக அமைந்தது. கனிஷ்ட இடைநிலைக் கல்வியில் 10 பாடங்களை அனைவரும் பயில வேண்டும். இதனால் இவை கட்டாயமாக்கப்பட்டன. பொதுவானவையாக்கப்பட்டன, பாகுபாடற்றவையாக்கப்பட்டன. சமுதாயத்தின் நலன் கருதி உருவாக்கப்பட்டன.

(தொடரும்)

1 Education in Srilanka' Colombo. Commonwealth Regional In-service Teacher Education work shop for Asia, 1978

**கல்வித்தராதர அடிப்படையில் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களின் விபரம்**

| வகை | மொத்தம் | வீதம் | (விசேட ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட) கைவேலை | விவசாயம் | மனையியல் | வர்த்தக | கணிதம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. பட்டதாரிகள் | 9756 | 10.5 | — | — | — | — | — | — | — | — |
| 2. டிப்ளோமா பட்டதாரிகள் | 146 | 0.2 | — | — | — | | | | — | — |
| 3. விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 7851 | 8.5 | 6 7 | 195 | 167 | 7.36 | 1331 | 1749 | 1565 | 310 |
| 4. பொதுப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் | 37516 | 40.5 | — | | | | | | | |
| 5. தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள் | 3312 | 3.6 | | | | | | | | |
| 6. தராதரப்பத்திர மற்றோர் | 33977 | 36.7 | — | | — | — | — | — | — | — |
| | 92558 | 100 | | | | | | | | |

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

## நிர்ப்பந்தங்கள் ...

"இனிமேல்தான் ஃபிரெண்ட்ஸ்! போர்ட் இல் ஒரு கால் வைக்கிற இடம்வரேக்கை என்ன செய்யப்போயினம் பாப்பம்..." பாரதி மிக உற்சாகமாக இருக்கிறன். ஏன் நேரம் 12-15 ஆகிக்கொண்டிருக்கும் அந்த நேரத்தில் எல்லாருந்தான் மிக ஆரவாரமாக இருக்கிறார்கள் - மஞ்சுவைத்தவிர! இப்போது மியூசிக் நிற்கும் போது ஒரு கால் வைக்கக் கூடிய இடத்தில் இருவரும் நிற்கமுடியாமல் தடுமாறி ஒவ்வொரு ஜோடியாக வெளியேற குமார் மட்டும் யாருமே எதிர்பாராதவிதமாய் தன் பக்கத்தில் நின்ற ராஜியை இரண்டு கைகளாலும் அலாக்காகத் தூக்கியபடியே தன் ஒற்றைக் காலில் நின்றுகொண்டு மறுகாலை உயர்த்திக்கொள்கிறான். பல கமராக்கள் இந்தப் 'போஸை'ப் படம்பிடித்துக்கொள்ள, பல கோணங்களிலுமிருந்து குமார் ராஜி ஜோடிக்குப் பாராட்டுதல்கள் வழங்கப்பட...ஹோய் ஹோய் என்று ஒரே ஆரவாரம்! தன் பக்கத்தில் நிற்கும் யாரோ ஒரு பெண்ணைத் தயக்கமின்றித் தூக்கிக்கொள்ளும் ஓர் ஆண்மகன் வெற்றிபெற்றவனாகவும், தனக்கு அண்மையிலுள்ள உரிமைகளோ உறவுகளோ எதுவுமற்ற ஓர் ஆண்மகனின் கைகளில் அடங்கிப்போகும் பெண் வெற்றிபெற்றவளாகவும் கருதப்படும் ஒரு விளையாட்டு! விசித்திரமான விளையாட்டு! உடல் வலிமையைப் பரீட்சிக்கவும், உள வலிமையைப் பரீட்சிக்கவும் பல விளையாட்டுகள், போட்டிகள் நடத்தப்படும் [illegible] இந்த விளையாட்டு [illegible] வலிமையைப் பரீட்சிக்கிறது! உயர் படிப்பு...மூளைசாலிகள் கூடும் இடம்...ஆனால் கோமாளித்தனமான, பண்புகள் அடகு வைக்கப்படுகிற விளையாட்டுகள். கேட்டால், 'அதெல்லாம் ஜஸ்ற் போர் ஏ பன்' என்ற இலேசான பதில்கள்.

மஞ்சு சிந்தனைக்குகையின் மிக இருட்டான பகுதியிலிருந்து வெளியேறி வருவதற்கு முன்பே எல்லோரும் வட்டமாக அடுக்கப்பட்ட கதிரைகளில் அமர்ந்துகொள்ள, மஞ்சுவும் எழுந்து போய் பாரதிக்குப் பக்கத்தில் ஒரு கதிரையைப் பிடித்துக்கொள்கிறாள். சிற்றுண்டிகளும் பானவகைகளும் பரிமாறப்படும்போது, மது குடிக்கத்தயங்கிய ஒருசில மாணவர்களுக்கும் வேறு சிலர் பலவந்தமாகப் பருக்கிக்கொண்டிருப்பதைப் பாரதி மஞ்சுவிடம் [illegible] எல்லோருக்கும் பருக்கிவிட்டார்களா போல இருக்கு' பாரதியிடம்கேட்கிறாள் மஞ்சு.

'ஓ, நோ பாலு எப்படியாவது தப்பியிருப்பார். அகப்படமாட்டார்' பாரதி கருத்து வழங்கும்போது மஞ்சுவின்கண்கள் பாலுவைத் தேடுகின்றன. சிற்றுண்டிச்சாலையின் உட்புறமிருந்த கையில் போத்தலுடன் வெளிப்பட்ட பாலு, 'டேய்... செல்வராஜ்... இன்னும்... இன்னும் கொஞ்சம் குடியடா... இப்பதான் அடுத்த கேம் வின்பண்ணலாம்...' என்று உளறியபடியே தள்ளாடிக்கொண்டு வந்து மஞ்சுவின் பக்கத்தில் இருந்த கதிரையில் உட்கார்ந்துகொள்ளும்போது, "இவரும் ஏமாற்றப்பட்டு விட்டாரா? என்ற திகைப்பில் ஒரு விநாடி கண்மூடிச்சாய்கிறாள் மஞ்சு.

அடுத்த "கேம்" ஆரம்பமாகும் உற்சாகத்தில் எல்லோருடைய கவனமும் அங்கே திரும்பியிருக்கும் நேரத்தில், பாலு மஞ்சுவும் பாரதியும் பாலுவிடம் மெதுவாகக் கேட்கிறார்கள்.

'என்ன பாலு நீங்களுமா இப்பிடி...?' நெற்றியில் புரண்டுவிழும் மயிரை இடது கையில் சுட்டுவிரலால் தட்டிவிட்டுக்கொண்டே இதழ் விரிக்காமல் ஒலிப்பதுபோன்ற மெல்லிய சத்தத்தில் அவர் சொல்லுகிறார்.

"நீங்கள்தான் ஏமாந்திட்டியள்! நான் டிரிங் பண்ணேல்லை. அட்பிடி அக்ற் பண்ணுறன். இல்லாட்டித் தப்பேலாது. இண்டைக்கு எப்பிடியும் எனக்குப் பாக்கி ரேஸ்ற் பிடிபடச் செய்யவேணும் என்று செல்வராஜ் பெற்பண்ணினவனும். அதுதான் இப்பிடி அக்ற் பண்ணிறன்' வார்த்தைகளை அளவுடன் முடித்துக்கொண்டு அடுத்த விளையாட்டிற்கான ஆயத்தங்களில் உற்சாகமாக ஓடிச் சென்றுவிட்டார் பாலு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உணவுப்பிரச்னை

இலங்கையில் மொழிப் பிரச்னை, அரசியல்பிரச்னை, தொழில் பிரச்னை, உணவுப் பிரச்னை, சாதிப்பிரச்னை எனப் பல பிரச்னைகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றுள் முக்கியமானது உணவுப் பிரச்னையாகும். உணவு இன்றி ஒருவனும் வாழ முடியாது. இவ்வுணவுப் பிரச்னை மூலம் நம் நாட்டுப் பொருளாதாரம் கீழ் நிலையை அடைந்துள்ளது. உலக சந்தையில் நெல்லின் விலை கூடியதாலும் நம்மிடம் அந்நியசெலாவணி இன்மையாலும் விவசாயத்துக்குத் தேவையான நீர் இல்லாமையாலும் நமது நாட்டிற்குத் தேவையான முழு உணவையும் பெற முடியவில்லை. இதன் காரணமாக உணவுப் பிரச்னை ஏற்பட்டது.

சரித்திரத்தை நோக்குவோம்.

நமது நாடு மன்னர்களின் காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்தது. பண்டைய மன்னர்கள் குளங்கள் வெட்டியும், கால்வாய்கள் அமைத்தும் நீர்ப்பாசனத்துறையில் கவனம் செலுத்தியும் விவசாயத்தைப் பெருக்கினர். முன்னர் இலங்கையிலிருந்து நெல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயிற்று என்றும் சரித்திரம் கூறுகிறது.

அந்நியர் வருகையால் இந்நிலை மாறியது. அந்நியர் நெல் உற்பத்தியைக் கைவிட்டு தேயிலை றப்பர் முதலிய வியாபாரப் பொருட்களை உற்பத்தி செய்தனர். எமக்குத் தேவையான நெல்லைக் குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுத்தனர். இதனால் நெல் உற்பத்தியை மக்கள் ஓரளவு கைவிட்டனர். அத்துடன் பலர் கல்வி கற்று உத்தியோகங்களில் அமர்ந்தனர். இதனால் உணவுப் பிரச்னை அதிகமாயிற்று. பெருகிவரும் சனத்தொகைக்கேற்ப உற்பத்தி பெருகவில்லை.

இலங்கை நெல்உற்பத்தியில் தன்னிறைவு பெற அரசாங்கமும் சகல மாகாணங்களிலும் விவசாய முகாம்களை நிறுவியிருக்கிறது. படித்த ஆண்கள் குடியேற்றத்திட்டம் படித்த பெண்கள் குடியேற்றத்திட்டம் ஆகியவற்றையும் அரசாங்கம் நிறுவியிருக்கிறது. புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக்குகிறது. வயல்களை இனாமாக விவசாயிகளுக்குக்கொடுக்கிறது. ஆண்டுதோறும் ஆகக்கூடிய அறுவடையைப் பெறுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கிவருகிறது. இன்னும் விவசாயத்தைப் பெருக்குவதற்கு விவசாயமும் ஒரு பாடமாகப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது.

மக்களும் இப்போது உணவுப் பொருள் உற்பத்தியில் இறங்கியுள்ளனர். இப்போது பட்டம்பெற்ற வேலையற்ற பல இளைஞர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையிலிருந்து பலர் மருத்துவம், பொறியியல்துறைகளில் உயர் கல்வி கற்க வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

அதேபோல நெல் உற்பத்தி முறையும் பெருக்கும் முறையைக் கற்க சீனா ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் சென்றால் மிகுந்த பலனை அளிக்கும். சனத்தொகை நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. ஆனால் அதற்கேற்ப உணவு உற்பத்தி கூடவில்லை.

செல்வன்
பேரம்பலம் கணேசலிங்கம்
(யாழ். இந்துக்கல்லூரி)

## வேற்றுநாட்டு பழமொழிகள்

மிக அதிகமாகப் பேசுபவர்கள் அதிகமாகப் பொய்யும் சொல்வார்கள்.

—கிரேக்கம்.

தங்க மூட்டைகளைச் சுமந்தாலும் கழுதை கழுதைதான்.

—ருமேனியா

பணம் என்னிடம் தாராளமாக இருக்கையில் என்னை எல்லோருமே சகோதரன் என்று அழைக்கிறார்கள்.

—போலந்து

உன் தலைக்கு மேலாக பறவைகள் பறந்து போவதை உன்னால் தடுக்க முடியாது ஆனால் உன் தலைமுடியில் அவை கூடு கட்டுவதை உன்னால் தடுக்கமுடியும்.

—சீனம்

ஒரு முட்டாளின் கேள்விக்கு சில சமயம் 40 அறிவாளிகளால் கூட பதில் சொல்லமுடியாதுபோய்விடும்.

—பெல்ஜியம்

அதிகம் கோபம் அடைந்திருக்கும்போது யாருக்கும் பதில் சொல்லாதே.

—கொரியா

மூடனும் அவனது பணமும் அதிக காலம் சேர்ந்து வாழ்வதில்லை.

—நைஜீரியா

## நீ வரவில்லை

மாடிப் படியேறி மரப்பிடியில் நீ நிற்கின்றாய்
மாறிப் பின்னேறி முதற்படியில் சாய்கின்றாய்.
ஓடி உனைத் தேடி மரத்தடியில் நிற்கின்றேன்.
ஒன்றும் புரியாது வழியினிலே காத்திட்டேன்

ஏறிச் சென்ற நீயுன் எழில்முகத்தைக்
காட்டிவிட்டாய்
இறங்கி வருவதாக எனை நினைக்கச் செய்திட்டாய்
யாரும் அடைய வொண்ணு சோர்க்கமதை
எட்டிவிட்டேன்
'யாரும் சோர்க்கமடா, மயக்க மென்ன'
என்றிட்டேன்

வருகின்ற பலரும் வாழ்த்துரைக்கச் செய்திட்டேன்
வளர்கின்றதாய் உறவை வரையச் செய்திட்டேன்
வருவாய் என எண்ணி வழியினிலே காத்திட்டேன்
உன்னைப் பட்டாடையுடன் வலப்பாகத்
தவமிருந்தேன்

எண்ணச் சுழலினிலே எனை மறந்து பயங்கிட்டேன்
உன்னைச் சுற்றி எந்தன் உறவு மனை கட்டிவிட்டேன்
வருடங்கள் உருண்டோடி வசந்தங்கள்
மறைந்த பின்னும்
வருவாய் நீ யென்று மனையினிலே காத்திட்டேன்

வரவில்லை நீ யென்று பார்த்து வரப் புறப்பட்டேன்-நீ
வரவில்லை இன்னும் அதோ தூரத்தில் காண்கின்றேன்
மாடிப் படியேறி மரப்பிடியில் நிற்கின்றாய்
மாறிப் பின்னேறி முதற்படியில் சாய்கின்றாய்

'செந்தீன்'
(யாழ். பல்கலைக்கழகம் மருத்துவபீடம், கைதடி)

# மாணவர் எண்ணம்

கண்டோஸ்'

## அறிந்து கொள்ளுங்கள்

வினா.

(1) ஷேவ்டி ரேசரை 1904ம் ஆண்டு கண்டுபிடித்தவர் யார்?

(2) குருடர் படிப்பதற்கு அச்சடிக்கும் முறையினைக் கண்டுபிடித்தவர் யார்?

(3 மைசூரிலுள்ள தங்க வயலின் பெயர் என்ன?

(1) கிறிஸ்தவ மதம் உரோமன் சக்கராதிபத்தியத்தின் அரசாங்கமாகியது எப்போது?

(5) தனித்தனியே எடுக்கக்கூடிய அச்செழுத்து (Movable Type) செய்யப்பட்டது எந்த ஆண்டில்?

(6) கோடுகளும் நட்சத்திரங்களுமுள்ள அமெரிக்கக் கொடி எப்போது உருவாக்கப்பட்டது?

(7) இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது எப்போது?

(8) முறையே பவனந்தி முனிவர் (நன்னூல்). மெய்கண்டார் (சிவஞானபோதம்) புகழேந்தி (நளவெண்பா), காளமேகம், வில்லிபுத்தூரர் (பாரதம்), அருணகிரி (திருப்புகழ்) ஆகியோர் வாழ்ந்த நூற்றாண்டுகளெவை?

(9) சந்திரகிரகணம் எப்போது, எப்படி உண்டாகிறது?

(10) இரவுக் காலங்களில் தாவரங்களினருகில் இருத்தல் நன்றன்று; ஏன்?

செல்வி ச. கலைச்செல்வி
யாழ். இந்துமகளிர் கல்லூரி

விடை:

(1) கில்லெட் (Gillette) அமெரிக்கர்

(2) பிறாய்லி (Braille) பிரான்சியர்.

(3) கோலார்.

(4) கி. பி. 324

(5) கி. பி. 1450

(6) 1777

(7) 1918-ல்

(8) 13, 13, 13, 14, 15, 16-ம் நூற்றாண்டுகளில்.

(9) பூரணையில் பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால்.

(10) அவை கரியமில வாயுவை வெளியே விடுவதால்.

வாங்கும்போது காதை மறந்துவிடு கண்களை மாத்திரம் விழிப்புடன் வைத்திருக்கவும்.

—செகோஸ்லவாக்கியா

(தொகுப்பு)

-வளர்மதி
நடராஜக்குருக்கள்
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, 9-ம் வகுப்பு)

## விடுகதை

அருகே பட்டம் குடை வெள்ளைப்பட்டணங்கு?

- தேங்காய்

மாடு மேயாத புல் வீடு நிறைந்த புல்?

- 'ஹவுஸ் புல்'

சிவப்பு அறைக்குள் சில்லறைக் காசுகள்?

- காய்ந்த மிளகாய்!

வெளிச்சத்தில் துணையிருக்கும் இருளில் மறையும்?

- நிழல்.

சொல்லச் சொல்லக் கேட்டு மெல்லமெல்லப் பேசும்?

- கிளி

தொகுப்பு;
நடராஜக்குருக்கள்
சிவசிறி
யாழ்-நல்லூர் இந்து தமிழ் பெண் பாடசாலை

# ஒலிம்பிக் கலைக் களஞ்சியம்

ஒலிம்பிக்ஸ் - 80 ஐ ஒட்டி ஒலிம்பிக் கலைக் களஞ்சியம் ஒன்று மாஸ்கோவில் வெளியிடப்பட்டுள்ளது.

இப் பிரசுரத்தில் அரை 8 ஆண்டு வரலாற்றில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டி விளையாட்டுக்கள், போட்டியாளர்கள், சம்பந்தப்பட்ட நடுவர்கள், சாம்பியன்கள் அனைத்தையும் பற்றிய தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

450 பக்கங்களைக் கொண்ட இப்பிரசுரத்தில் 1,300 விஷயங்கள் அகர வரிசையில் எழுதப்பட்டுள்ளன.

பண்டைய கிரேக்க ஒலிம்பியா, ஒலிம்பிக் விளையாட்டின் பூர்வீகம் போன்ற விபரங்களும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் கலைக் களஞ்சியத்தைத் தயாரிக்கும் திட்டம் 10 ஆண்டுகளுக்கு முன்னர் உருவானது. அன்று வெளியிடப்பட்ட நூல் மிகச் சிறியதாகும்.

இப்பிரசுரத்தை தயாரிப்பதில் 70 நிபுணர்களும் பத்திரிகையாளர்களும் பங்குகொண்டனர்.

சோவியத் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஸர்ஜி பல்லோவ் இதன் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றினார்.

## இலவசச் சிரிப்பு

மந்திரி: இலவசப் புத்தகம் கொடுத்ததால் பெரிய கஷ்டமாய் போச்சு.

அதிகாரி: ஏன் ... ?

மந்திரி: இலவசப் புத்தகத்தில் படித்தவர்கள் இப்போது உணவு, வீடு, உடை, எல்லாம் இலவசமாகத் தரச் சொல்லி கலாட்டா பண்ணுகிறார்கள்! ......

●

தம்பர்: அந்த டாக்டர் எந்தக் காரியத்தையும் இலவசமாகத்தான் செய்து கொடுப்பார்... ஒரு சதம் கூட வாங்கமாட்டார்! ......

சோமர்: ஏன் பெரிய கொடை வள்ளலோ?...

தம்பர்: இல்லை இலவசப் புத்தகத்தில் படித்து டாக்டர் ஆனவர்!...

செல்வன் வி. சந்திரகுமார்
யாழ் மத்திய கல்லூரி.

●

ஒருவர்: என்ன இன்றைக்கு டியூட்டரிகளில் சனமே யில்லையே?...

மற்றவர்: இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில இலவசப் புத்தகம் கொடுக்கிறார்கள். ...னம், அதனால் எல்லாம் ... பள்ளிக்குப் போய்விட்டார்கள்!...

## கண்டவழி சிந்தனையே!

பொங்கியெழும் அறிவுலகில்
பொங்கி வரும் புயல்கள் பல
புதிர் கணைகள் தீர்ப்பதற்கு - மனிதன்
கண்டவழி சிந்தனையே

சிந்தித்தான் சிந்தித்தான் - முறையின்றிச் சிந்தித்தான்
வாதமொன்றை முன்வைத்து - மூளையைத்
குளப்பிக் கொண்டான்
சிந்தனை உலகமதின் மாய வேலையிதில்
சிந்தனைக்கு உருக்கொடுக்க முன்வந்தார் ஹேரக்ளிரன்

கிரேக்க மாதேசமதில் - விஞ்ஞான உலகமதில்
சாதனைகள் புரிந்து விட்ட விஞ்ஞானி அரிஸ்டோட்டல்
சிந்தனையின் அவசியத்தை பூதலம் வாழ் மாந்தருக்கு
தனதறிவு ஆற்றலதால் ஆவலுடன் தெளிய வைத்தான்

நீதியைக் கண்டுணர - நியாய வாதத்தை வாதிக்க
தாய் மொழியிலே தெளிவையூட்டி
சிந்தனையை வளம் செய்தான் - சிந்தனையின் தெளிவதற்கு
தாய் மொழியின் தெளிவதுவே - அவசியம்
வேண்டுமென்பார்

ஜே. றொனி
(பரியோவான் கல்லூரி)

## அம்புலி பற்றிய சில தகவல்கள்

சந்திரனில் இருந்து ஒளி பூமிக்கு வர 1 1/3 செக்கன் நேரம் எடுக்கும்.

அங்கு காணப்படும் மிக உயர்ந்த மலை 30,000 அடி உயரமாகும்.

சந்திரனில் தங்கும் ஒவ்வொரு நிமிடமும் 15 கோடி டாலர் செலவாகும்.

அங்கு பகலில் வெப்பநிலை 250 பாகை பரனைற் இரவில் 270 பாகை குளிரும் இருக்கும்.

பூமியில் 150 றாத்தல் நிறையுள்ளவர் சந்திரனில் 26 றாத்தல் நிறையுள்ளவராக இருப்பார்.

சந்திரனில் ஓட இருக்கும் காரின் பெயர் ரோவர் ஆகும். இது 400 றாத்தல் நிறையுடையது.

சந்திரனில் முதலில் மனித காலடி பட்ட நேரம் 1969-ம் ஆண்டு, யூலை மாதம் 21-ந் திகதி காலை 8 மணி 26 நிமிடம் 20 விநாடி ஆகும்.

புவி - சந்திரன் இடைத் தூரம் 2,40 000 மைல்கள் சந்திரனின் விட்டம் 2160 மைல் ஆகும்.

தொகுப்பு:
செல்வன் சி இ. கணேஷ்
யாழ். இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜேஸ்வரி (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி— விஜயகுமாரி
குங்குமம்
(புதிய பிரதி)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சுந்தராம்பாள் நடித்த
ஒளவையார்
(புதிய பிரதி)

SANTHI JAFFNA Phone 7142
Daily 10-30 1-30, 4-45, 7-00 & 9-45 p.m.
LAST FEW DAYS ONLY
MARATHONMAN
—A THRILLER — COLOR—
Coming "SHARK'S TREASURE" —Color

ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
விஜயா
நாகேஷ்
திருடன்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 8 வது வாரம்
வின்ஸர் (தொலைபேசி 46)
(யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
தினசரி 10-30, 1-30, 4-30, 7-15 10-00
சுதாகர்-ராதிகா-விஜயன்-ரதி
மற்றும்பலர் நடித்த
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணச்சித்திரம்)

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily at 10-30, 4-45, 7-15 & 9-45
MYSTERIOUS Dr. SATAN
(Color)

ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
இந்தியாவில் தொடர்ந்து 200 நாட்கள் ஓடி
வெள்ளிவிழா சாதனை ஏற்படுத்தியது
✶ கமலஹாசன் (இருவேடங்களில்)
✶ ஸ்ரீதேவி மற்றும்பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
தொடர்ந்து கொட்டகை நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுவதால், ரிக்கற்றுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00 6-30, 9-30
சிவாஜி- விஜயா நடித்த
தங்கப்பதக்கம்

வீகே (சாவ.நகர்) போன் 7898
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி லதா
ஞானக்குழந்தை

வெற்றிகரமான 5-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ரா: நிர்மலா-ஜெயச்சந்திரன் ... நடித்த ... V. R. ... 
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக்கலர்)
டைரக்ஷன் : ஜோ தேவ் ஆனந்த்

ஹரன் ...
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்—பிரமிளா
...
(புதிய பிரதி)

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யும். அது நியாயமா? மோகன் நீங்கள் என்னை உண்மையாய் நேசித்திருந்தால்... ஆம் மோகன்! என் ஆத்மா திருப்திப்பட என் அக்காவிற்கு வாழ்வு கொடுங்கள்...

மேலும் சாந்தியால் வாசிக்க முடியவில்லை. 'உமா எனக்காக உனக்குத் தேடிவந்த வாழ்க்கையை அழிக்கப் போறியா? வேண்டாம் உமா வேண்டாம். நான் இதை ஒருநாளும் ஏற்கமாட்டேன். உமா இவ்வளவுகாலமும் இந்தச் சமூகத்திற்கும், வீட்டிற்கும் சுமையாக இருந்தவ இன்றைக்கு நான் உன் எதிர்கால வாழ்விற்கே சுமையாகிட்டன். உமா நீ நீடு வாழ்க! உன்னைப்போல் ஒரு தங்கையை நான் அடுத்த பிறப்பிலும் பெறவேண்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டு விடைபெறுகிறேனம்மா. உங்கள் ஆசைய மறுத்தன துயிலை மறந்து துடித்த சாந்தியின் விழிகள் நிரந்தரத் துயிலைத் தழுவிக்கொண்கின்றன.

(யாவும் கற்பனை)

# ரமண மகரிஷியும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கூடாகச்சென்றது. அப்போது ஆன்மாவின் பலவித உறைகள் அல்லது தோல்கள் கழன்றுபோயின. எனவே அவர் பிறவியில் திரும்பமுடியாத மேலானநிலையை அடைந்தார்."

மகரிஷி பிறவியிலிருந்து விடுதலையடைந்தவருடைய உடலை எரிப்பதை விரும்பவில்லை அந்த உடல்ஆணுயிருந்தாலென்ன, பெண்ணுயிருந்தாலென்ன? அது கோயிலுக்குச் சமானம் என்பது அவர் கருத்து. ரமணரின் தாயார் அருணாசல மலையின் தெற்கு சரிவுகளில் சமாதி வைக்கப்பட்டு ஒரு லிங்கம் அதன்மேல் ஸ்தாபிக்கப்பட்டது சில மாதங்களில் பகவானும் தாம் முன் பிருந்த ஸ்கந்தாச்சிரமத்தை விடுத்து சமாதியின்பக்கம் குடியேறினர். அங்கே ரமணாச்சிரமம் உண்டாக்கப்பட்டது.

1948-ம் ஆண்டில் பக்தர்கள் ரமணரின் தாயார் சமாதியின் மேல் அழகிய கோயிலைக்கட்டினார்கள். இப்போ பகவான் ரமணரின் கோவிலும், அவர் தாயாரின் கோயிலும் பக்கம் பக்கமாக அவர்களுடைய தொடர்பின் அழகை விளம்பரப்படுத்திக்கொண்டு நிற்கின்றன

-நன்றி: பவான்ஸ் ஜேர்னல்

# கவிதை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சொற்களைப் பாருங்கள். பந்தலை என்ற சொல்லின் முதலெழுத்து 'ப'. பதிபல என்ற சொல்லின் முதலெழுத்தும் 'ப'. இது போலவே மற்றச் சொற்களும் அமைந்துள்ளன பாடல் அடியின் முதற் சீரிலும் பெரும்பாலும் நாலாம் சீரிலும் ஒரே எழுத்து முதலில் வருவது மோனையாகும்.

கண்ணிணைக் கயலைப்
பெற்றுள
கவின் இதழ்க் கனிகள்ள்
பெற்றுள்
விண்ணிலா இதுவே என்ன
விளங்கிடும் வதனம்
பெற்றுள்
எண்ணரும் கலைகள்
எல்லாம்
அழிபிடம் இவனே ஆளுள்
பெண்ணிவள் எனச் சொல்
கின்றார்
பேரெழில் இவட்கே
சொந்தம்

இந்தப் பாடலில் எதுகை மோனை எவையென்பதை வாசித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

## களஞ்சிய இடவசதி நெருக்கடி:

# வடபகுதிக்கு உணவுக் கப்பல் வருவதில் தாமதம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வரும் கப்பல்களினால் அரசாங்கம் தொடர்ந்து அதிகளவில் அந்நியச்செலாவணியைச் சம்பாதித்து வரும் அதே நேரத்தில் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க போதியளவு களஞ்சிய இடவசதிகள் இல்லாத காரணத்தால் அதிகமான கப்பல்களை வடபகுதிக்குத் திருப்பி விடமுடியாதிருப்பதாகத் தெரியவருகிறது.

அண்மையில் "அட்மிரல் ஜமலெஜவிக்" என்னும், யூகோஸ்லேவியா கப்பல் பிரால் லிலிருந்து 10-538 தொன் கோதுமை மாவுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்திருந்தது. இக்கப்பலிலிருந்து இறக்குமதி வேலைகளை 14 நாட்களில் முடிக்க இலங்கை அரசாங்கம் கப்பல் உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தது

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இறக்குமதி வேலைகளை பொறுப்பேற்ற காங்கேசன்துறையைச்சேர்ந்த கப்பல் ஏஜெண்டான திரு. வே. ஜெயபாலசிங்கம் கப்டனியாரின் ஒப்பந்தத்திலும் பார்க்க ஐந்து நாட்கள் 15 மணித்தியாலங்கள் முன்னதாகவே இறக்குமதி வேலைகளை முடித்துக் கொடுத்துள்ளார்கள்.

ஐந்து நாட்கள் 15 மணித்தியாலங்கள் முன்னதாக பறியல் வேலை முடித்ததன் காரணத்தால் இலங்கை அரசாங்கம் 2,40,000 ரூபா அந்நிய செலாவணியாக சேமித்துள்ளது காங்கேசன்துறைக்கு இதுவரை நாலு கப்பல்களின் கடைசி மூன்று கப்பல்களையும் இறக்குமதி வேலையைப் பொறுப்பேற்ற மேற்படி கப்டெனியார் குறிப்பிட்ட காலங்களிலும் பார்க்க இறக்குமதி வேலையை விரைவாக முடித்ததகதிக அந்நிய செலாவணியை சேமித்ததற்காக உணவுக்கமிஷனர் பாராட்டியுள்ளார்.

மட்டக்களப்பு பகுதியில்

# கிராம யுவதிகளின் கைத்தொழில் வாய்ப்புக்கு அமைச்சர் ஏற்பாடு

## பன்குடாவெளியில் ராசதுரை விளக்கம்

(மட்டக்களப்பு)

"மட்டக்களப்புப் பகுதியில் கிராமந்தோறும் யுவதிகள் சிறுகைத்தொழில் வாய்ப்புப் வேண்டுமென்பதற்காகக் கைத்தொழில் நிலையங்களை நிறுவிவருகிறேன். கிராமங்களில் கிடைக்கின்ற மூலப் பொருட்களைக்கொண்டு இவைகளை அமைத்துவருகின்றேன். இதன் பிரகாரம் இக்கிராம யுவதிகள் நலன் கருதி இந்த மட்பாண்ட நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் பல கிராமங்களில் பட்டாண்ட நிலையம், பாய் பின்னும் நிலையம், தையல் நிலையம் என்பன திறந்து வைத்துள்ளேன். இன்னும் திறக்கவுள்ளேன்." இவ்வாறு அமைச்சர் திரு செல்லையா இராசதுரை பன்குடாவெளி மட்பாண்டத் தொழிற்சாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது -

"சில அரசாங்க ஊழியர்கள் எமது பகுதி அபிவிருத்தி வேலையைத் தாமதப்படுத்தி அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். அவர்கள் எந்தப் பிரச்சனை என்றாலும் என்னிடம் வந்து தெரிவித்தால் அதற்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பேன். இருந்தும் அவர்களால் சிறந்த சேவை செய்ய முடியாவிட்டால் அவர்கள் வெளியேறி விடுவது நல்லது."

மற்றும் அமைச்சர் நேற்றுப் போடியார் குடியேற்றத் திட்டத்தில் வீடமைப்புத் திட்டத்திற்கான அத்திபாரக் கல்லை நாட்டி வைத்தார்.

இவ் வைபவத்திற்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. க. தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

மற்றும் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. டேவிட் துரைசாமி, வீடமைப்பு உத்தியோகத்தர் திரு சி. பத்மநாதன், திரு. க. சின்னத்தம்பி (அதிபர்) உட்படப் பலர் பேசினர்.

[அ]

# கலைக்கழக ஆண்டு விழா

(மட்டக்களப்பு)

கமலாலயம் கலைக்கழகத்தின் 12 வது ஆண்டு விழா அண்மையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் கமலாலயம்கழகத் தலைவர் திரு. பொ. இ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் திரு. செ. செல்வரத்தினம் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்தார். மட்டக்களப்பு தமிழ்க்கலாமன்றத்தின் செயலாளரும், பல தரமான நகைச்சுவை நாடகங்களைத் தயாரித்து, மேடையேற்றியவரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு. சே. நவரத்தினத்தின் சேவையைப் பாராட்டி "நடிகநவமணி" என்ற பட்டமும் வழங்கப் பட்டது திரு எம் எக்ஸ். சி. நடராஜா பட்டமளிப்புரை நிகழ்த்த எஸ். பொன்னுத்துரை, இரா. நாகலிங்கம் (அன்புமணி) ஆகியோர் அவரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

இக்காலத்தில் கலைஞர்களுக்கு கிடைக்கும் சகல வசதிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்த தமிழ்க்கலை ஞர்கள் முன்வரவேண்டும். பொதுமக்கள் கலைஞர்களின் முயற்சிகளை ஆதரித்து ஊக்குவிக்க முன்வரவேண்டும் என்று எஸ். பொன்னுத்துரை தனது உரையில் குறிப்பிட்டார்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

# சீனி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திபதியிடம் பலர் புகார்செய்ததையடுத்து நிலைமையை ஆராய்ந்தபின் அவரது பணிப்புரையின் பேரிலேயே சீனியின் விலையை 6 ரூபாவாக அதிகரிப்பதென்றும் சகல தனியார் கடைகளிலும் சீனியை அதே விலையில் விற்க அனுமதிப்பதென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. [ ]

# ஜே. ஆர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபிரதேச தபால் தந்தி தொடர்பு அத்தியட்சகர் திரு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எம் தம்பிமுத்து உட்பட பிறரும் பலர் உரையாற்றினர். [செ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களுக்கு
ஓர் நற்செய்தி......
CIC பெயின்ற் வகைகளான
டியுகோ - DUCO
டியுலக்ஸ் - DULUX
பென்ரலைற் - PENTALITE
சகல வர்ணங்களிலும்
கிடைக்கிறது

கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்:7130


## சிறந்த கைப்பணிக்கு ரூபா ஒரு லட்சம் பரிசு

(யாழ்ப்பாணம்)

சகல மாவட்டங்களும் பங்கு பற்றும் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும் கைப்பணி வாரமும் கொழும்பு கலா பவனத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 30-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் யூன் மாதம் 6-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை இக்கைப்பணிப் பொருட்காட்சியும் கைப்பணி வாரமும் நடைபெறவுள்ளது.

சகல மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய, நவீன கைப்பணிப்பொருட்கள் காட்சியில் வைக்கப்படவுள்ளன.

மிகச்சிறந்த காட்சிப் பொருளுக்கு ஒரு லட்சம் ரூபா பரிசு வழங்கப்படவுள்ளது.

(கொ)


மலிவு விற்பனே
மூஸாஜி சன்ஸ்

சிலோபெக் பொலித்தீன்
புதிய விலை - சில்லறைவிலை
2'' - 36'' - 14-50 ருத்தல்
கலர் 24'' - 16-50 ருத்தல்
வியாபாரிகளுக்கும், மொத்தமாக வாங்குபவர்களுக்கும்
விசேஷ கழிவு வழங்கப்படும்.

சீக்கோ ரேடர்ஸ்
43, நவீன சந்தை,யாழ்ப்பாணம்.


## தமிழரின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாடுகளில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் அரசியல் அமைப்பு முறையும், அந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சமத்துவமுமே அந்நாடு இவ்வளவு விரைவில் முன்னேற்றமடைவதற்குக் காரணமாகும்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்த நாட்டின் நிலப்பரப்பைக்கொண்டு கணிக்க முடியாது. அந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படும் உரிமையைப் பொறுத்தே அந்த நாட்டின் அபிவிருத்தி அமைந்திருக்கும்.

இன்று நடைபெறும் இக் கூட்டத்தில் பல்வேறு மொழி பேசுபவர்களும், கட்சிக்காரர்களும், கொள்கை வேறுபாடு உள்ளவர்களும் ஒன்று கூடியுள்ளனர். நாம் எல்லோம் அடிப்படைக் கொள்கையளவில் வேறுபட்டாலும் தமிழ் மக்களுக்கு சுய நிர்ணயம் வழங்கவேண்டும் என்ற கொள்கையால் ஒன்றுபட்டுள்ளோம். சகல கட்சிகளும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணயம் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுத் தூதுவர் திரு. பறுளேமே யாழ்ப்பாணத்திலுள்ள வலைத் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். வலைத்தொழிற்சாலை நல்ல முறையில் செயல்படவேண்டுமானால் நவீன யந்திரங்கள் அமைக்கப்படவேண்டுமெனக் கூறிய அவர் எமது பகுதியை பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்குத் தம்மாலான உதவிகளைச் செய்துதருவதாக உறுதியளித்துள்ளார்.

மற்றும் பலரும் உரையாற்றினர். [கொ]

# 8 லட்சம் ரூபாவில் நெசவு நிலையம்

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டத்தில் நான்கு நுண்தறி நெசவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந் நுண்தறி நெசவு நிலையங்களுக்காகப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து எட்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நுண்தறி நெசவு நிலையங்கள் நான்கும் சுன்னாகம், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, புங்குடுதீவு ஆகிய இடங்களிலேயே ஆரம்பிக்கப்படவுள்ளன. நுண்தறி நெசவு நிலையங்கள் ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான முயற்சிகளை யாழ். சிறு கைத்தொழில் இலாகா உதவி அத்தியட்சகர் திரு எஸ். விசுவலிங்கம் மேற்கொண்டுவருகிறார்.

நுண்தறி நெசவுநிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாகவிருக்கும் என திரு. விசுவலிங்கம் தெரிவித்தார். [கொ]

### தவறிவிட்டது


திருநெல்வேலி குமாரசாமி ரோட், இந்து மகளிர் வீதி, பழம் ரோட் பிள்ளையார் கோவில் ஆகியவற்றுக்கிடையில் தங்கச் சங்கிலி ஒன்று தவறி விழுந்து விட்டது. எடுத்தவர் எம்மிடம் தந்தால் சன்மானம் வழங்கப்படும். திருமதி பரராஜசிங்கம், 182, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 5817



இதோ ஓர் சிந்தை கவர் செய்தி!
யாழ்ப்பாணத்திற்கான
ரிபிகள் கடுகதி
(சிறந்த கண்காணிப்புச் சேவை)

பொழுதுபோக்குகள் பல நிறைந்த, சாய்ந்து அமரக்கூடிய ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட, சுகபோக கோச் வண்டிசேவை.

17 மே 1980 ல் இருந்து நாள்தோறும் ஆரம்பமாகிறது
இடவசதி முன் ஏற்பாடுகள் இப்பொழுது இருந்தே செய்துகொடுக்கப்படும்
குளிர் தென்றலில் சுகமாகப் பயணம் செய்யுங்கள்

ஆசன ஏற்பாடுகள்:

கொழும்பு - ரிபிகள்ருவர்ஸ் அன்ட் ரவல் சேவிஸ், 76, ஜாவத்தை வீதி (சலுசலவுக்கு எதிரே) கொழும்பு-5, தொலைபேசி இல. 82325.

முற்பதிவுகள். நாள்தோறும் காலை 8 தொடக்கம் மாலை 6 வரை.

எஸ் எம். சதானந்தன் அன்ட் கம்பனி, 56 இரண்டாம் குறுக்குத் தெரு புறக்கோட்டை, கொழும்பு-11, தொலைபேசி 22373.

முற்பதிவுகள் மு. ப. 9 முதல் மாலை 6 வரை (கிழமை நாட்களில்).

யாழ்ப்பாணம் - வின் இன், 20, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

ஏற்பாடுகள் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தினம்தோறும்.

கட்டணம் - கொழும்பு-1, யாழ்ப்பாணம், தனிவழி ரூ. 55/-

குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் நிறுத்தப்படும்.

புறப்படுதல்:-

கொழும்பு-1, ரிபிகள் ருவர்ஸ் காரியாலயம், 76, ஜாவத்தை வீதி, கொழும்பு - 5, காலை 11-30 க்கு.

2. வெள்ளவத்தை ஹொட்டேல் சபயர் எதிரேயிருந்து காலை 11-45க்கு.

3. கோட்டை புகையிரத நிலையம் பிற்பகல் 12-30 க்கு.

யாழ்ப்பாணம் - வின் இன் 20, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் பிற்பகல் 12-15 க்கு காலை 12-00 க்கு.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் பிற்பகல் 12-30.

ரிபிகள் ருவர்ஸ் அன்ட் ரவல் சேர்விஸ்
76, ஜாவத்தை வீதி, கொழும்பு-5.


### 5-ம் வருட நினைவு அஞ்சலி



அம்பலவாணர் கிருஷ்ணபிள்ளை

அளவெட்டி அம்பலவாணர் கிருஷ்ணபிள்ளை தமது 81-ம் வயதில் சிவபதம் அடைந்தார்.

தற்பொழுது இலங்கையில் வசிக்கும் அன்னாரின் மகன் பல் வைத்திய கலாநிதி கி. நித்தியானந்தன் அவர்கள் அளவெட்டி ஞானவைரவர் கோயிலில் (அலுக்கை) தந்தையாரின் பிறந்ததினமாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை (18-5-80) நண்பகல் அன்னதானம் வழங்குகிறார்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.

167-(63), மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 5797

### கண்டக்டராகிய டிப்போ சுப்பரின்டன்

(புலோலி)

பஸ் வண்டியில் கடமையில் ஈடுபடுவதற்கு பஸ் கண்டக்டர் எவரும் இல்லாததால் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ சுப்பிரின்டன் திரு. வே. சிறிஸ்கந்தராசா கண்டக்டராக கடமையாற்றினார்.

அண்மையில் பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் செல்லும் பஸ் வண்டியில் பணியாற்றுவதற்குக் கண்டக்டர் இல்லாததால் அந்த பஸ் சேவையை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனை அறிந்த பருத்தித்துறை டிப்போ சுப்பிரின்டன் திரு ஸ்ரீஸ்கந்தராசா தானே அந்த பஸ் வண்டியில் கண்டக்டராகக் கடமையாற்றி பஸ் வண்டியைத் தொடர்ந்து சேவையிலீடுபடுத்தி பிரயாணிகளுக்கு வசதியை ஏற்படுத்தினார். (கு)

### புங்குடுதீவில் 'விழிப்புக்குழு'

(வேலணை)

அமைதியைப் பராமரிக்கவும் களவு, கொள்ளை, கொலை, சண்டைகள் நடைபெறாமல் தடுக்கவும் "விழிப்புக்குழு" ஒன்று இன்று 18-ம் திகதி புங்குடுதீவில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றது.

சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் அமைக்கப்படவிருக்கும் இந்நிகழ்ச்சியில் காவலூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம் ஜே சதியன், திரு பரம்சோதி, சர்வோதய அமைப்பாளர் திரு க திருநாவுக்கரசு உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஆதாயணத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under No. CE/8948/78. The Eelanaadu, Post Box No 49, Telegrams "Eelanaadu, Phone 389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org